CCRAS / PUB-10

# அகத்தியர் வைத்திய பூரணம்—205

## (மூலமும் உரையும்)

வெளியீடு :

ஆயுர்வேத சித்த மைய ஆராய்ச்சிக் கழகம்

புதுடில்லி - 110 058

10623

1997

# அகத்தியர் வைத்திய பூரணம்—205

## (மூலமும் உரையும்)

பதிப்பு:

சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி ஆவணத்துறை,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்.
(இந்திய அரசு)
சென்னை-600 106.

வெளியீடு:

ஆயுர்வேத சித்த மைய ஆராய்ச்சிக் கழகம்
புதுடில்லி-110 058

1997

*First Edition* 1997

© Central Council for Research in Ayurveda and Siddha, Jawaharlal Nehru Bharatiya Chikitsa Avum Homoeopathy Anusandhan Bhavan,
No. 61 to 65, Opp. 'D' Block,
Janakpuri,
New Delhi-110 058.

Central Library of Indian Medicines & Homoeopathy
9 SEP 2001
Madras-106
60623

**Price :**

*Printed by :*

St. Louis Institute of Printing for the Deaf, Adyar,
Chennai-600 020.

# பதிப்பித்தவர்கள்


1. **டாக்டர் கோ. வேலுச்சாமி**, எம்.டி. (சித்தா),
திட்ட அலுவலர்,
சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி ஆவணத்துறை,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600 106.

2. **டாக்டர் ச. ஜெகஜோதிப்பாண்டியன்**, பி.ஐ.எம்.,
உதவி ஆராய்ச்சி அலுவலர்,
சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி ஆவணத்துறை,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600 106.

3. **டாக்டர் கி. மீனாட்சிசுந்தரமூர்த்தி**, பி.ஐ.எம்.,
உதவி ஆராய்ச்சி அலுவலர்,
சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி ஆவணத்துறை,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600 106.

## FOREWORD

The Central Council for Research in Ayurveda and Siddha has been publishing rare Siddha works that have not been published so far. The present work "Agathiyar Pooranam 205" is the eighteenth publication in that series which is to come out from the Literary Research and Documentation Department of the Council.

The author of this ancient work, Agasthiyar is one of the englightened personages amongst the eighteen Siddhars. There are more than fifty treaties to his credit dealing on Medicine, Alchemy and Tantra. He was also the author of First Tamil grammar 'Tholkappiyam'. He is respected as the founder of the "Siddha Medicine".

This work "Agathiyar Pooranam-205" comprises of 205 verses. Preparations of Nei, Chooranam, Thailam, Parpam, Rasayanam, Kudineer and Chendooram useful for common ailments are described elaborately, besides their methods of preparations and therapeutic uses. Being one of the earliest work, this gives an account of simple preparations/formulae which are very easy to prepare and used by the common man. The information contained in the book about this ancient knowledge, which had remained hidden, so for in the manuscript form will be of immense utility to research scholars, medical practitioners, scientists and others interested in Siddha Medicine.

**(DR. H.R. GOYAL)**
*Director*

## ACKNOWLEDGEMENT

The book "Agathiyar Pooranam-205" is the culmination of Pharmaceuticals in the preparations of Nei, Chooranam, Thailam, Parpam, Rasayanam, Kudineer and Chendooram are vividly described.

The Council is grateful to the Govt. of India for financial assistance through the Ministry of Health and Family Welfare. The Council is thankful to the Hon'ble Union Minister of State for Health and Family Welfare and the President of the Governing Body, Standing Finance Committee and Scientific Advisory Committee (Siddha) for their valuable guidance and encouragement.

The Council records its appreciation of the keen interest taken by Dr. G. Veluchamy, Project Officer, Literary Research & Documentation Department, for his efforts in compling the publication. The Council is also thankful to Dr. Ravi Shankar, Assistant Director (Siddha) and Programme Officer of Siddha discipline for editing and scrutinising this publication.

I also acknowledge the names of Dr. S. Jega Jothi Pandian and Dr. K. Meenakshisundaramoorthy, Assistant Research Officers (Siddha) for having gone through the proof and arranging printing of this publication.

The Council also acknowledges the service rendered by St. Louis Institute of Printing for the Deaf, Chennai-20 for printing this publication in time.

**(DR. H.R. GOYAL)**
*Director*

# பதிப்புரை

சித்த மருத்துவத்தில் இதுகாறும் அச்சாகி புத்தக வடிவில் வராத நூல்களையும் பழங்காலத்தில் பாக்களாக அச்சாகி தற்காலத்தில் எளிதில் காணக்கிடையா நூல்களையும் விளக்க உரைகளோடு வெளியிட்டு மருத்துவர்களுக்கும், மருத்துவ மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், உபயோகத்திற்காக, புது டில்லி ஆயுர்வேத சித்த மைய ஆராய்ச்சி கழகத்தின் கீழ் இயங்கிவரும் சென்னை அரும்பாக்கத்தில் உள்ள சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி ஆவணத்துறை சிறப்பாக பணியாற்றி வருவது அனைவரும் அறிந்ததே.

''அகத்தியர் வைத்திய பூரணம் 205'' இந்நூல் தற்போது முதல் பதிப்பாக வெளிவருகின்றது. இந்நூல் சென்னை சித்த மருத்துவ இலக்கிய ஆராய்ச்சி ஆவணத் துறையினால் சேகரிக்கப்பட்டு (Survey Tour) மூலப்பாடல்கள் படியெடுக்கப்பட்டு பின்பு மூலமும் உரையும் எழுதப்பட்டு ஒப்புநோக்கப்பட்டு ஆங்காங்கே தேவையான மாற்றங்களை செய்து செவ்வனே வெளிவந்துள்ளது.

பதினெண் சித்தர்களில் தலைசிறந்து விளங்கியவர் அகத்தியர் ஆவார். இவருக்கு குறுமுனி என்று சிறப்புப் பெயர் உண்டு. இவர் சித்த மருத்துவத்தில் மட்டுமல்லாது தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர் என்பதற்கு சான்றாக நூல்கள் பறைசாற்றுகின்றன.

''ஆமென்று என் பேரகத்தியனாகும்
அருளினோ மென்னுடைய சிஷ்யன் பதினெண்பேர்''

அகத்தியர் சௌமியசாகரம் 1200

உணவே மருந்து, மருந்தே உணவு இதனையே உணவாதி செயல்களின் மாறுபாட்டால் பிணிகள் தோன்றுமென்றும் சித்த மருத்துவம் கூறுகிறது. அவ்வாறு பிணி ஏற்படுங்கால் அவைகளைக் குணப்படுத்த இயற்கையில் கிடைக்கக்கூடிய மூலிகைகள், தாதுக்கள், சங்கமப் பொருட்கள் இவைகளால் மருந்தாகச் செய்து உட்கொள்வதால் நோய்கள் நீங்குவதுடன், எதிர் விளைவுகள் ஏற்படாமல் உடலுக்கு நன்மையையும் தரும்.

சித்த மருத்துவ இலக்கியங்கள் பாடல்களாக இருப்பது யாவரும் அறிந்த ஒன்றே. அதனைப் போன்றே இந்நூல் 205 பாடல்களைக் கொண்டு சிறப்பாக விளங்குகின்றது. மேலும் இந்நூலில் சூரணம், தைலம், நெய், குடிநீர், பற்பம், செந்தூரம், இரசாயனம் பலவிதமான தயார் செய்யும் முறைகளை விளக்கமாகவும், தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. மருந்தினை உட்கொள்ளும் அளவு, காலம், நோய்கள், அனுபானம் போன்ற விபரங்களை உள்ளடக்கிய அற்புத நூலாகும்.

இந்நூல் அச்சிடுங்காலத்தில் பிழைதிருத்தி நன்முறையில் நன் நூலாய் வெளிவர பெரிதும் உதவிய டாக்டர் ச. ஜெகஜோதிப்பாண்டியன், டாக்டர் கி. மீனாட்சி சுந்தரமூர்த்தி ஆகிய உதவி ஆராய்ச்சி அலுவலர்களின் அளப்பரிய பணி பாராட்டத்தக்கதே. மற்றும் டாக்டர் சி.எஸ். உத்தமராயன், டாக்டர் இரா. மாணிக்கவாசகம், திரு. த.ப. இராசரத்தினம், தட்டச்சுப் பணியாளர் திரு. க. கருணாநிதி ஆகியோரின் சீரிய பணி பாராட்டிற்குரியதே.

இந்நூல் வெளிவர உதவியதுடன் முகவுரை (Foreword) வழங்கிய நமது ஆயுர்வேத சித்த

மருத்துவ ஆராய்ச்சிக் கழக இயக்குனர் டாக்டர் எச். ஆர். கோயல் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறுகிய காலத்தில் நன்முறையில் அச்சிட்டு விரைவில் வெளிவர உதவிய புனித லூயிஸ் அச்சகத்தாரின் பணி பாராட்டிற்குரியதே.

திட்ட அலுவலர்,
சித்த மருத்துவ இலக்கிய
ஆராய்ச்சி ஆவணத்துறை.

சென்னை-106,
13-5-1997.

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| | காப்பு | |
| 1. | பிணிக்குறிப்பு | 1 |
| 2. | நூற்பெருமை | 3 |
| 3. | பற்ப காண்டம் | 4 |
| 4. | அய பற்பம் | 5 |
| 5. | காந்த பற்பம் | 6 |
| 6. | தாமிரச் செந்தூரம் | 7 |
| 7. | இரசபற்பம் | 8 |
| 8. | வெள்ளீய பற்பம் | 9 |
| 9. | காரீய பற்பம் | 10 |
| 10. | வெண்கல பற்பம் | 10 |
| 11. | திரா பற்பம் | 11 |
| 12. | பித்தளை பற்பம் | 12 |
| 13. | ஒழுகறை பற்பம் | 13 |
| 14. | பால் கருடக்கல் பற்பம் | 13 |
| 15. | கல்நார் பற்பம் | 14 |
| 16. | நாக பற்பம் | 15 |
| 17. | வெள்ளி பற்பம் | 16 |
| 18. | தங்க பற்பம் | 17 |
| 19. | கந்தக பற்பம் | 19 |
| 20. | மண்டூர பற்பம் | 20 |
| 21. | அஞ்சனக்கல் பற்பம் | 21 |
| 22. | தாளக பற்பம் | 21 |
| 23. | சாதிலிங்க பற்பம் | 22 |
| 24. | வீர பற்பம் | 23 |
| 25. | பொரிகாரப் பற்பம் | 23 |
| 26. | சாத்திரபேதி பற்பம் | 24 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 27. | வெண்குந்திரிக பற்பம் | 24 |
| 28. | பவழபற்பம் | 25 |
| 29. | வைர பற்பம் | 26 |
| 30. | இரத்தின பற்பம் | 26 |
| 31. | பாடாண பற்பம் | 27 |
| 32. | சாரநீறு | 28 |
| 33. | உப்பு பற்பம் | 29 |
| 34. | ஆமையோடு பற்பம் | 30 |
| 35. | முத்து பற்பம் | 31 |
| 36. | கற்பூர பற்பம் | 31 |
| 37. | துருசு பற்பம் | 32 |
| 38. | பொன்னிமிளை பற்பம் | 33 |
| 39. | தங்க பற்பம் (வேறு முறை) | 34 |
| 40. | மேகத்துக்குத் தயிலம் | 36 |
| 41. | வில்வவேர் தயிலம் | 37 |
| 42. | வேங்கைத் தயிலம் | 37 |
| 43. | வெட்டி வேர்த் தயிலம் | 38 |
| 44. | வேம்பின் பட்டைத் தயிலம் | 39 |
| 45. | குறுந்தொட்டித் தயிலம் | 40 |
| 46. | கொடுவேலி வேர்த் தயிலம் | 40 |
| 47. | சீரகத் தயிலம் | 41 |
| 48. | சூரிவித்துத் தயிலம் | 42 |
| 49. | கீழ்காய் நெல்லித் தயிலம் | 43 |
| 50. | சங்கம் வேர்த் தயிலம் | 44 |
| 51. | அமுக்கராத் தயிலம் | 44 |
| 52. | இஞ்சித் தயிலம் | 45 |
| 53. | செம்முள்ளித் தயிலம் | 46 |
| 54. | சாரணத் தயிலம் | 46 |
| 55. | இருவேலித் தயிலம் | 47 |
| 56. | அகிற்கட்டைத் தயிலம் | 47 |
| 57. | அறுகம் வேர்த் தயிலம் | 48 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 58. | கொடுப்பைத் தயிலம் | 48 |
| 59. | கையாந்தகரைத் தயிலம் | 49 |
| 60. | சவரித் தயிலம் | 50 |
| 61. | செந்நாவற்பட்டைத் தயிலம் | 50 |
| 62. | அகிற்பட்டைத் தயிலம் | 51 |
| 63. | சீரகச் சூரணம் | 57 |
| 64. | குரோசாணிச் சூரணம் | 57 |
| 65. | கொடிவேலிச் சூரணம் | 58 |
| 66. | கொம்பரக்குக் கிரதம் | 60 |
| 67. | வெள்வேல் வேர்த் தயிலம் | 61 |
| 68. | பாகலிலைத் தயிலம் | 62 |
| 69. | மருதோன்றிக் கியாழம் | 63 |
| 70. | வெட்பாலைக் கியாழம் | 63 |
| 71. | வில்வவேர்க் கியாழம் | 64 |
| 72. | திரிபலாதிக் கியாழம் | 64 |
| 73. | சந்தனக் கியாழம் | 65 |
| 74. | வேம்புக்கியாழம் | 66 |
| 75. | இருவேலிக் கியாழம் | 66 |
| 76. | மூலிகை அவியல் நீர் | 68 |
| 77. | சிவன் வேம்புத் தயிலம் | 68 |
| 78. | வீழிவேர்த் தயிலம் | 69 |
| 79. | சேங்கொட்டைத் தயிலம் | 69 |
| 80. | தேற்றான் தயிலம் | 70 |
| 81. | வாலுளுவைத் தயிலம் | 70 |
| 82. | வெண்புரசு தயிலம்-வெள்வேல் தயிலம் | 71 |
| 83. | கருஞ்சீரகத் தயிலம் | 71 |
| 84. | அமுக்கிரா வேர்த் தயிலம் | 71 |
| 85. | சீனப்பா தயிலம்-ஓமத் தயிலம் | 72 |
| 86. | சாரணை வேர்க்குழித் தயிலம் | 72 |
| 87. | வெந்தோன்றிக் கிழங்குத் தயிலம் | 73 |

# அகத்தியர் வைத்திய பூரணம் — 205

## காப்பு

ஆதிமுதற் பூரணமாம் பொருளைப் போற்றி
அம்பிகையி னடிபகலு மல்லும் போற்றி
சோதிமிகு காரணசற் குருதாட் போற்றி
சொலற்கரிய நாதாக்கள் துணைத்தாட் போற்றி
வேதன்மகிழ் கலைவாணி சரணம் போற்றி
வேதாந்த விளக்கொளியின் கமலம் போற்றி
நாதமிகு மாறாதா ரத்தாட் போற்றி
நளினமிகுங் கணபதிபூ ரணத்தாட்காப்பே.

**பொழிப்புரை :-**

அனைத்திற்கும் ஆதியாகவும், பூரணமாகவும், விளங்கும் சிவத்தைப்போற்றி, அன்னையின் பாதத்தை இரவும் பகலும் போற்றி, சற்குருவின் பாதத்தைப்போற்றி, சொல்லற்கரிய பெருமையுடைய நாதாக்களின் பாதம் போற்றி, பிரமனுடன் கலைவாணியின் பாதங்கள் போற்றி, ஆராதாரங்களின் ஆதாரங்கள் போற்றி, கணபதியின்தாள் போற்றி இந்நூலைக் காக்க வேண்டுமாம்.

## பிணிக்குறிப்பு

பூரணமாய் மும்மூலம் பொறியிற் சூடாம்
புகையெழும்பி மேகத்தாற் சிரசிற் சூடாம்
காரணமாய் நீர்கலந்து கனரோகங்கள்
கனன்றெழுந்த வாய்வதனாற் சூலைரோகம்
வாரணமாய் வாதத்தி லெழுந்தமேகம்
மத்தியமாம் பித்தத்திற் கிராணியாச்சு
தாரணமாய் வாய்வதனாற் குன்மமாச்சு
சார்ந்திடவே சிலேற்பனந்தான் ஐயமாமே. 1.

**பொழிப்புரை :-**

மும்மூலத்தால் பொறியிலும் சிரசிலும் சூடாகும். கனன் றெழுந்த வாய்வதனால் சூலைரோகமும், வாதத்தால் மேக ரோகமும், பித்தத்தால் கிராணியும், வாய்வினால் குன்மமும், சிலேத்துமத்தால் ஐயமும் ஆகும்.

ஆமப்பா வாதத்தால் விரண முண்டாம்
அத்தியினிற் சூடுகொண்டாற் சுரங்கள் காணும்
காமப்பா லாகிரியால் மேக முண்டாங்
கைகடந்த போகத்தால் ரோகமாச்சு
தாமப்பா மேகத்தால் பிறந்த ரோகந்
தாரணியி னாலாயிரத்துச் சில்வானந்தான்
ஓமப்பா மேகங் களிருபத் தொன்றாம்
உலகத்தில் நீரிழிவா யுதித்தவாறே. 2.

**பொழிப்புரை :-**

வாதத்தால் விரணமுண்டாகும், எலும்பில் சூடு கொண்டால் சுரம் தோன்றும், போதைப்பொருள்களாலும், அளவுகடந்த போகத்தாலும் மேகரோகம் தோன்றும். மேகநோய் இருபத் தொன்றானாலும் அதன் தொடர்பினவும் விளவினவுமாய் பல ரோகங்கள் தோன்றும், நீரழிவும் தோன்றும்.

வாறான பித்தத்தா லுஷ்ண ரோகம்
மருவியதோர் வாதத்தால் சீதரோகம்
தேறாத வையத்தால் கபரோகந்தான்
திரண்டெழுந்த வாயுவினால் மூன்றுமாச்சு
கூறான தசவாய்வு தொந்தங் கொண்டு
கொடியகனல் வாதமுடன் விந்துமாகி
ஏறாத விந்ததிலே பிறந்தமேக
மெழுந்தபித்த சிலேற்பனத்தி லிருந்ததாமே. 3.

**பொழிப்புரை :-**

பித்தத்தால் வெப்பத்தொடர்பான நோய்களும், வாதத் தால் சீதத்தொடர்பான நோய்களும், சிலேத்துமத்தால் கபந் தொடர்பான நோய்களும், வாய்வின் விகற்பத்தால் மூன்றும் உண்டாகும். தசவாயுக்களோடு தொடர்புகொண்டு கொடிய கனல், வாதம் இவற்றுடன் விந்துவாகி அதனால் மேகநோயேற் பட்டு பித்த சிலேத்துமம் மிகும்.

## நூற்பெருமை

ஆமிந்த நூற்குநிகர் ஒன்றுமில்லை
மறிந்தநூல் தனைப்பார்த்தால் சித்தர்க்கொப்பு
போமேகேள் நூல் கண்டால் நோய்கள் போகும்
பொன்வெள்ளி ரெண்டுமிந்த நூலுக் குள்ளே
நாமப்பா நுணுக்கத்தை யார்க்குச் சொன்னோம்
நல்லோர்க்குச் சொல்லியே நாட்ட வேணும்
ஓமிந்த நூல்பார்த்து வைத்தியஞ் செய்தால்
உத்தமனே பிரமரிஷிக் கொப்பாங்கானே. 4.

**பொழிப்புரை :-**

இந்த நூலுக்கு ஒப்பானது வேறு இல்லை. இந்நூலின் உண்மையை அறிகின்றவர்கள் சித்தரை ஒப்பர்; நோயெல்லாம் விலகும். இந்நூலின் நுணுக்கங்களை நல்லோர்க்குச் சொன்னதாம். இந்நூல் பார்த்து வைத்தியம் செய்தால் பிரமரிஷிக்கு ஒப்பாகக் கருதப்படுவர்.

காணப்பா மிக்கமூலிகை யினாலே
கட்டான கிரதங்கள் சூரணங்கள்
பூணப்பா தைலங்கள் பற்பந்தானும்
பூட்டினேன் ரசாயணங்கள் கியாழத்தோடு
தோணப்பா சுளுவுமெத்த உலகத்தோர்க்குச்
சொன்னநூ லிது போலச் சுருக்கமில்லை
நாணப்பா வருணன்போல் செந்தூ ரங்கள்
நாட்டுகிறேன் வெகுலேசு நன்றாய்க் கேளே. 5.

**பொழிப்புரை :-**

மூலிகையினால் கிரதங்கள், சூரணங்கள், தைலங்கள், பற்பங்கள், ரசாயணங்கள், கியாழங்கள் முதலியவற்றை எளிதாக இவ்வுலகத்தோர்க்கு, இந்த நூல்போல் வேறு எதுவும் சொல்லவில்லை. செந்தூரங்கள் பற்றியும் வெகு எளிதாகச் சொல்லியுள்ளேன்.

கேளப்பா முந்நூற்றிற் செந்துரங்கள்
கெடியான சித்தருக்குஞ் சிவயோகிக்கும்
வாளப்பா உலகத்தில் பண்டிதர்க்கும்
வரிசைபெறச் சொல்லிவிட்டே னிருநூற்றுள்ளே

நாளப்பா சாத்தியமா ரோகந்திர
நாட்டினேன் முந்நூற்றி லசாத்தியம்போக
வேளப்பா விந்நூலை வைத்துக் கொண்டு
வேணபடி வயித்தியத்தை விரும்பிச் செய்யே. 6.

**பொழிப்புரை :-**

மூன்னூறில் சித்தருக்கும், சிவயோகிக்கும், பண்டிதருக்கும், செந்தூரம் பற்றிச் சொல்லிவிட்டேன். இருநூறில் பல்வகைப் பிணிதீரும் வகைசொன்னேன். இந்த நூலைத்துணைக்கொண்டு மருத்துவத்தை விரும்பிச் செய்வாயாக.

செய்வதற்கு வெகுசூட்சஞ் சொல்லிவிட்டேன்
செகத்திலே பிழைப்பதற்கே யெழுதா முன்னூல்
கைவசத்தில் வந்தமுதல் சிலவுமில்லைக்
கண்டுமற்றப் பெரியோர்க்கு மெளியோர்க்குந்தான்
மெய்யிலுள்ள வினைகளெல்லாம் நீங்கிப்போக
வீண்சாஸ்திர மாய்ந்தவர்கண் மயங்கிப் போவார்
நெய் மிகுந்த பால்போலே செந்தூரங்கள்
நிகழ்த்துகிறேன் னிசமாகப் பற்பந்தானே. 7.

**பொழிப்புரை :-**

உலகிலுள்ளோர் வினைநீங்கிபோக வெகு சூட்சமாக பாலில் மறைந்துள்ள நெய்போல செந்தூரங்கள், பற்பங்கள் பற்றிச் சொல்லுகிறேன்.

## பற்ப காண்டம்

பற்பமா கின்றவகை யதனைக் கேளு
பாடினேன் பலநூலின் காரசாரஞ்
செப்புகிறேன் மூலிகையி னீறிற்றானால்
சீட்டனுக்கு மனத்தெளிவு தானுண்டாகும்
எப்போது முண்டுவரப் பயமேயில்லை
யிந்நூலை யெளிதாக வியம்ப வேண்டாம்
நுட்பவகை யென்னூலிற் தப்பா தப்பா
நுணுக்கமாய்ச் செய்தொழிலி னுண்மைபாரே. 8.

**பொழிப்புரை :-**

முதலில் பற்பங்கள் பற்றிச் சொல்வேன். உலோகங்களை நீறாக்கக் காரசாரமின்றி மூலிகையினால் செய்தால் மாணவன் மனத்தெளிவு பெற்றவனாவான். இத்தகைய பற்பத்தை உண்டு வர எப்போதும் பயமே இல்லை. இந்த நூலை யாருக்கும் எளிதில் இயம்ப வேண்டாம். தவறாமல் பலன் தரும் இந்த நூலின் நுட்பத்தை உணர்வாயாக.

## அய பற்பம்

நுண்மைபெற அயத்தகடு நெற்கனமே தட்டி
நுணுக்கமாய்ச் சாணகலஞ் சாண்தானீளம்
வண்மையாய் வீழிவேர் பலந்தானொன்று
வாட்டியே மெழுகுபோ லரைத்துப் பூசித்
தண்மையாய் ஓட்டில்வைத்தே ஓடு மூடிச்
சந்துவாய்ச் சீலைசெய்து கெசபுடத்தில்
நன்மையாய் வைத்திடவே பற்பமாகும்
நன்றாக விபூதிபோற் காணுமென்னே. 9.

**பொழிப்புரை :-**

அயத்தகட்டினை நெல்லின் கனமும், சாண் அகலமும், சாண் நீளமும் இருக்குமாறு தட்டி எடுத்துக்கொண்டு, வீழிவேர் ஒரு பலம் எடுத்துக்கொண்டு வாட்டிப்பின் மெழுகுபோல் அரைத்துப் பூசி ஓட்டில் வைத்து ஓட்டை மூடிப்பின் சீலைசெய்து கெச புடம்போட விபூதிபோல் வெண்மையான பற்பமாகும்.

என்னவே யிதையெடுத்து வைத்துக் கொண்டே
யெலுமிச்சம் பழமதனை நான்காய்க் கீறி
அன்னவே பழம்பத்துச் சட்டியிட்டே
யதிலேதான் கையான்சாறு நாழி வாரு
பன்னவே காடியறு நாழி விட்டுப்
பருவமா யவித்துலர்த்தி யெடுத்துக் கொண்டு
தின்னவே பணவெடைகள் கீற்றொன்றில்தான்
தீருமடா பாண்டுவகை தீரும்நோயே. 10.

**பொழிப்புரை :-**

இதை எடுத்து வைத்துக்கொண்டு பத்து எலுமிச்சம் பழத்தை எடுத்து நான்காய்க்கீறிச்சட்டியிட்டே அதில் கையான் சாறு நாழிவார்த்து, காடியறு நாழிவிட்டு அவித்துலர்த்தி எடுத்துக் கொண்டு பணவெடை கீற்றொன்றில் வைத்துத்தின்ன பாண்டுவகை தீரும்.

## காந்த பற்பம்

திருநோய் குறைநோயுங் குட்டஞ் சூலை
தேனதனிற் கொண்டிடவே தீரும்தீரும்
பாருநோய் தீர்ப்பதற்குக் காந்தந் தன்னில்
பற்பத்தைச் சொல்லுகிறேன் பணிவாய்க் கேட்பாய்
யாருமே செய்வதற்குச் சிறியா நங்கை
யமுரிவிட்டே யிடித்திந்த சாற்றை வார்த்து
நீருதான் வற்றவற்ற வரைத்து மூன்று
நிசமாக வில்லைசெய்து ரவியில் வையே. 11.

**பொழிப்புரை :-**

குறைநோய், குட்டம், சூலை, இவை தேனில் கொள்ளத் தீரும். அடுத்து காந்தபற்பத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. சிறியா நங்கையை அமுரிவிட்டு இடித்துச் சாற்றைவார்த்து நீர் வற்றவற்ற அரைத்து வில்லை செய்து வெயிலில் வைப்பாயாக.

வைத்தவில்லை காய்ந்தபின்பு ஓடுமூடி
வளமாகச் சந்துவாய்ச் சீலைசெய்து
கைத்தவில்லை கெசபுடத்தில் நீறிப்போகும்
காந்தத்தின் பெருமைதனைக் காட்டொண்ணாது
சுத்தமுள்ள கிராணியொடு சோகைதீரச்
சொல்லுவோ மாதளங்காய்ச் சாறுவார்த்து
மெத்தனவே சுக்குதனை யரைத்துக் கிண்டி
மிதமாகக் காந்தபற்பம் பணவெடைதான் கொள்ளே.
12.

**பொழிப்புரை ;-**

இவ்வில்லை காய்ந்தபின்பு ஓடுமூடி, சீலை செய்து கெச புடம் போட வில்லை நீறிப்போகும். இக்காந்த பற்பத்தின் பெருமையைச் சொல்லமுடியாது. கிராணி, சோகை இவைதீர மாதளங்காய்ச் சாறுவார்த்து, சுக்கு அரைத்துக் கிண்டி காந்த பற்பம் பணவெடை கொள்ளுவாயாக.

கொள்ளவே மண்டலத்தில் தீரும்பாண்டு
கொடிதான சலக்கழிச்சல் பிரமேகங்கள்
தள்ளவே நீர்க்கிரிச்சிக் கனுபானங்கேள்
சஞ்சீவி சூரணத்தாற் சாந்தமாகும்
உள்ளபடி மூலமொடு கிராணிக்கெல்லாம்
உலோகபற்பங் காந்தபற்பமிரண்டுங் கூட்டி
வள்ளலே காந்தாரி சூரணத்தில்
வைத்திடவே தீரும்நோய் மகிழ்ந்து கேளே. 13.

**பொழிப்புரை :-**

ஒரு மண்டலத்தில் பாண்டு நோய், சலக்கழிச்சல், பிரமேகங்கள், நீர்க்கிரிச்சரம் இவைதீரும். அனுபானங்களாகச் சஞ்சீவி சூரணத்தைக் கொள்ள சாந்தமாகும். மூலம், கிராணி எல்லாம் உலோக (அயபற்பம்) பற்பம், காந்தபற்பம் இரண்டும் கூட்டி காந்தாரி சூரணத்தில் கொடுக்கத்தீரும்.

## தாமிரச் செந்தூரம்

கேளப்பா தாமிரத்தின் துட்டு வாங்கி
கிருபையுடன் நெற்கனமாய்த் தகடுதட்டி
வேளப்பா ஆடுதொடா மூலி வேரும்
வெண்ணொச்சி வேரிரண்டுஞ் சமனாய்ச் சேர்த்து
நாளப்பா எருக்கின்பா லதனா லாட்டி
நலமாகத் தகட்டின்மே லப்பிப்பின்னுஞ்
சூளப்பா ஓட்டில்வைத்தே ஓடு மூடிச்
சுகமாகச் சந்துவாய்ச் சீலை செய்யே. 14.

**பொழிப்புரை :-**

நெற்கனமாய்த்தாமிரத்தகடு எடுத்து ஆடாதோடை வேரும், வெண்ணொச்சி வேரும், சமனாய்ச் சேர்த்து எருக்கம் பாலால் ஆட்டிப்பின் தகட்டின் மேல் அப்பி ஓட்டில் வைத்து மேலே ஒரு ஓடுமூடிச்சீலை செய்வாயாக.

சீலையது மூன்று செய்து கெசபுடத்திற்
சேர்ந்திடவே யருணன்போல் செந்தூரந்தான்
ஆலையா குன்மமெட்டுந் தீரவேண்டி
அட்டசூ ரணத்துடனே தேனுங் கூட்டிக்
காலையொடு மலையி லுங் கொள்வீராகில்
காணாத வாயுவர்க்க மெல்லாம் போகும்
சூலையென்ற குன்மவகை தீரவேண்டிச்
சுருக்காக ரசபற்பஞ் சொல்கிறேனே. 15.

**பொழிப்புரை :-**

மூன்று சீலைசெய்து கெசபுடம் போடச்சூரியன்போல் செந்தூரம் உண்டாகும். குன்மம் எட்டும் தீரவேண்டின் அட்ட சூரணத்துடன் தேனும் கூட்டிக் காலையும் மாலையும் கொள்க. வாயுவின் அனைத்து வகைத் துன்பங்களும் மறைந்துபோகும். அடுத்துச் சூலை என்னும் குன்மவகை தீர ரசபற்பம் ஒன்று சொல்லுகிறேன்.

## இரசபற்பம்

சொல்கிறேன் ரசந்தன்னைச் சுத்திசெய்து
சுகமாகச் சிவகரந்தைச்சாறு விட்டாட்டி
அல்கிறேன் மூன்றுநா ளரைத்த பின்பு
அடைபோலப் பிடித்ததனை யுலரவைத்து
மல்கிறேன் ஓட்டினில்வைத்து ஓடுமூடி
வளமாகச் சந்துவாய்ச் சீலை செய்து
பல்கிறேன் குக்குடத்தில் மாண்டு போகும்
பணவெடையிற் சூலைபதினெட்டும் போமே. 16.

**பொழிப்புரை :-**

ரசத்தைச் சுத்திசெய்து சிவகரந்தைச் சாறுவிட்டு மூன்று நாள் அரைத்தபின்பு அடைபோலப்பிடித்து உலரவைத்து, ஓட்டில் வைத்து மேலே ஒரு ஓடுவைத்து மூடி சீலை செய்து கோழிப்புடம் போடப் பற்பமாகும். இதில் பணவெடைகொள்ள சூலை பதினெட்டும் மறையும்.

பதினெட்டுக் குட்டமரை யாப்புக்கிரந்தி
பரங்கிக்குப் பணவெடையிற் பனைவெல்லத்தில்
எதிரிட்ட நோய்சயங்க ளெல்லாந்தீரு
மீரைந்து நாட்கொள்ளு மிருநேரந்தான்
சதிரட்ட மேகவகை தீரவேண்டிச்
சாற்றுகிறேன் வங்கபற்பஞ் சார்ந்து நீகேள்
அதிரிட்ட வெள்ளீயக் கட்டிவாங்கி
அப்பனே நெற்கனமா யடித்துக் கொள்ளே 17.

**பொழிப்புரை :-**

பதினெட்டுக்குட்டமும், அரையாப்பும், மற்றும் கிரந்தி, பரங்கிநோய் முதலியவையும் விலகும். பணஎடை பனைவெல்லத்தில், இரு நேரம் பத்துநாட்கள் கொள்ள சயம் முதலான நோய்கள் தீரும். மேகவகை தீரவேண்டி வங்கபற்பம் பற்றிச் சொல்லுகிறேன். வெள்ளீயக்கட்டி எடுத்து நெற்கனமாய்ச் செய்து கொள்க.

## வெள்ளீய பற்பம்

அடித்திட்ட தகடதுவோ பலந்தானொன்றே
ஆடுதொடா மூலிவேர் பலந்தானொன்றே
துடித்திட்ட வெண் தோன்றிக் கிழங்குமொன்றே
சுகமாக வரைத்ததனை மேலேயப்பி
வெடித்திட்ட ஓட்டில்வைத்தே ஓடுமூடி
வெண்மையாய்க் கெசபுடத்தில் வெளுத்துநீறும்
வடித்திட்ட மேகவகை இருபதுக்கும்
வைத்திடவே பணவெடைதான் மருவிக்கொள்ளே 18.

**பொழிப்புரை :-**

இத் தகட்டில் ஒருபலம் நிறையுடையதாக எடுத்துக் கொண்டு, ஆடாதோடை வேர் ஒருபலமும், வெண்தோன்றிக் கிழங்கு ஒருபலமும் அரைத்து அதன் மேல் அப்பி ஓட்டில்வைத்து ஓடுமூடி கஜபுடம்போட பற்பமாகும். பணஎடை கொள்ள மேகவகை இருபதும் விலகும்.

மருவியதோ ராவாரைப்பஞ் சாங்கம் வாங்கி
மைந்தனே தேன்விட்டு மத்தித் தேதான்
இருபொழுது கொண்டிடவே நீர்ச் சுரப்பு
இயல்பான கல்லடைப்புக் கிரிச்சினங்கள்
அருவியென்ற தசையடைப்புப் பிரமேகங்கள்
அனுபான மறிந்து செய்தா லகன்று போகும்
கருவியென்ற காரீய பற்பங் கேளு
கருதரிய நொச்சியிலைக் கவசமாக்கே. 19.

**பொழிப்புரை :-**

ஆவாரைப் பஞ்சாங்கத்துடன் தேனைவிட்டு அரைத்துக் கொள்ள நீர்ச்சுரப்பு, கல்லடைப்பு, கிரிச்சினங்கள், தசை யடைப்பு, பிரமேகங்கள் முதலியன அனுபானமறிந்து செய்தால் அகன்றுபோகும். அடுத்துக் காரீய பற்பம் பற்றிச் சொல்லு கிறேன். நொச்சியிலையைக் கவசமாக்குவாயாக.

## காரீய பற்பம்

ஆக்கியதோர் வெள்ளீய பற்பம் போலே
அழகாகப் புடம்போட வெந்துநீறும்
தூக்கியதோர் சூலையொடு குட்டந்தீரும்
சுனைப்புள்ள கிரந்திபிர மேகந்தீருந்
தேக்கியதோர் திரேகத்திற் காந்தல் தீரும்
சீரற்ற நீர்க்கடுப்பு வரட்சி தீரும்
பாக்கியமாந் தேகத்தி லுஷ்ணமெல்லாம்
பறக்குமடா காரீய பற்பத்தாலே. 20.

**பொழிப்புரை :-**

வெள்ளீயபற்பம் போல புடம்போட வெந்து பற்பமாகும். இக்காரீய பற்பத்தால் சூலை, குட்டம், கிரந்தி, பிரமேகம், தேககாந்தல், நீர்க்கடுப்பு, நீர் வரட்சி, தேக உஷ்ணம் முதலியன தீரும்.

## வெண்கல பற்பம்

பற்பமாம் வெண் கலத்தைச் சொல்லக் கேளு
பசலையிலை தனையரைத்துக் கவசஞ்செய்து
அற்பமா யெண்ணாதே ஓட்டில் வைத்தே
அழகாகக் கெசபுடந்தா னறிந்து போடு

நுற்பமாய் நீறியது வெள்ளையாகும்
நுணுக்கமடா பணவெடைநெய் தேனிற்கூட்டி
உற்பனமாய்க் கொண்டிடவே சூலை போகும்
உறப்பான குன்மமுடன் வாய்வு தீரும். 21.

**பொழிப்புரை :-**

பசலை இலையில் அரைத்துக் கவசம் செய்து ஓட்டில் வைத்துக் கெசபுடம்போட வெண்ணிற பற்பமாகும். பணவெடை நெய்யில் கொள்ள சூலைநோயும், தேனில் கொள்ள குன்மமுடன் வாயுவும் தீரும்.

தீருமே சயரோக மிருமல் மாந்தை
சிவசிவா யென்னசொல்வேன் வெண்கலத்திேனர்மை
ஊருமே லிருக்கின்றோர்க் கின்னூல் கிட்டில்
யோகவான் வயித்தியத்துக் காதியாகும்
பாருமே யிம்முறையை அறிந்து செய்தால்
பற்பத்தி னருமையெல்லாங் காணலாகும்
யாருமே செய்வதற்கீ தறிந்து சொன்னேன்
அந்தந்த நூல்தேடி யலையவேண்டாம் 22.

**பொழிப்புரை :-**

மேலும் இப்பற்பத்தால் சயரோகம், இருமல், மாந்தம் முதலியன நீங்கும். வைத்தியத்துக்கு ஆதாரமாக இருக்கும் இந்நூலைப்பெறும் மருத்துவர்யோகவானாவார். எளிமையாக யாரும் செய்வதற்காக இம்முறையைச் சொன்னேன்.

## திரா பற்பம்

அலையாம லின்னமொரு சேதி கேட்பா
யாச்சரியந் திராவினுட வதிசயந்தான்
இலையான தும்பையிலை யதனைப் பூசி
யிட்டுவிடு கெசபுடமே யோட்டில் வைத்து
நிலையான திராத்தகடு நீறிப் போகும்
நீர்க்கிரிச்சி வண்டுகடி சில்விஷங்கள்
குலையான குன்மங்கள் சயரோகங்கள்
குட்டமொடு சூலைபதி னெட்டும் போமே. 23.

**பொழிப்புரை :-**

திராவினைத்தும்பை இலையைப் பூசி ஓட்டில் வைத்துக் கஜபுடம்போட தகடுநீறிப்போய் வெண்மையாகும். இப்பற்பத்தால் நீர்க் கிரிச்சம், வண்டுகடி, சில்விஷங்கள், குன்மங்கள், சயரோகங்கள், குட்டம், சூலைபதினெட்டு முதலியன நீங்கும்.

## பித்தளை பற்பம்

எட்டாத நிலவாகைச் சூரணத்தி
லினித்தேன்சேர்த் தொருநாளே யிருநேரந்தான்
முட்டாமற் பத்துதினங் கொள்வீராகில்
மோசமில்லை நோய்களெல்லா முறிந்துநீங்கும்
கட்டாத பித்தளையின் பற்பங் கேளு
காஞ்சொறியின் வேரரைத்துக் கனமாய்ப்பூசி
வட்டான ஓட்டில் வைத்தே ஓடு மூடி
வைத்திடுவாய் கெசபுடத்தில் மாண்டு போமே 24.

**பொழிப்புரை :-**

இதனை நிலவாகைச் சூரணத்தில் தேன் சேர்த்து ஒரு நாளைக்கு இரண்டு வேளை வீதம், பத்து நாட்கள் கொள்ள நோய்கள் விலகும். பித்தளையின் பற்பம் பற்றிச் சொல்லுகிறேன் கேட்பாயாக. பித்தளையில் காஞ்சொறியின் வேரரைத்துக் கனமாய்க்கவசமிட்டு ஓட்டில் வைத்து ஓட்டில் மூடி கஜபுடம் போட மாண்டுபோகும்.

மாண்டுபோம் நோய்கடனைச் சொல்லக்கேளு
வாய்வோடு குன்மமுதல் கிராணி மூலம்
பாண்டோடு நீரச்சுரப்பு வாய்நீ ரூரல்
பாய்கின்ற குடல்வாயு பாரிச வாய்வு
ஆண்டதொரு வானந்த வாய்வு கொண்ட
வனுபான மறிந்து செய்தால் நோய்கள் தீரும்
பூண்ட நல்ல வொழுகறையைச் சொல்லக் கேளு
புகழான பற்பமொன்று புகலுவேனே 25.

**பொழிப்புரை :-**

வாய்வு, குன்மம் முதல் கிராணி மூலம், நீர்ச்சுரப்பு, பாரிச வாயு முதலிய நோய்கள் தக்க அனுபானம் அறிந்து கொடுக்க விலகும். அடுத்து ஒழுகறைப்பற்பம் பற்றிச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

## ஒழுகறை பற்பம்

புகலுவேன் கஸ்தூரி யரைத்தே யப்பி
போட்டிடவே கெசபுடத்தில் பொருமி நீறும்
சகதலங்கள் மெச்சுமடா விந்த நீறு
தேசத்தில் வயித்தியர்க்குக் கிட்டுமோ சொல்
அகலாத பாண்டோடு வீக்கஞ்சோகை
அப்பனே மகோதரநீ ராம்பலோடே
இகலாத நோயதனுக் கனுபானங்கேள்
இட்டிடுவா யிஞ்சித்தே னிரண்டினாலே 26.

**பொழிப்புரை :-**

ஒழுகறையில் கஸ்தூரியை அரைத்து அப்பி கஜபுடம் போடப் பற்பமாகும். உலகோர் போற்றும் வகையில் பாண்டு, வீக்கம், சோகை, மகோதரம் முதலிய நோய்களுக்கு இஞ்சிச் சாற்றிலும், தேனிலும் அனுபானமாகக் கொடுக்கவேண்டும்.

## பால் கருடக்கல் பற்பம்

நாலான நாள் தனிலே வாங்கிப் போகும்
நரைதிரையு மில்லையடா நமனும் வாரான்
சோலாகச் சொல்லவில்லை பற்பஞ் செய்யத்
தொழிலாளி நீயானாற் செய்து பாரு
பாலான கருடக்கல் நீற்றக் கேளு
பவிசுகெட்ட பண்டிதனோ நீற்றப்போறான்
நூலான நூல்களெல்லாம் பார்த்தாலென்ன
நுணுக்கமா யிந்நூலை நோக்காய் நாயே 27.

**பொழிப்புரை :-**

நான்கு நாட்களில் விலகும். நரைதிரை அற்றுப்போகும். நமனும் வாரான். அடுத்துப்பால் கருக்கல் பற்பம் பற்றிச் சொல்வேன். நுணுக்கமாய் இந்த நூலைப் பார்ப்பாயாக.

நாய்போலே திரிந்தலைவான் வைத்தியஞ் செய்ய
நளினமுள்ள வகையொன்று மறிய மாட்டான்
பேய்போன்ற உலகத்திற் பிணியைத் தீர்க்க
பெருநூற்கு முதல்வருமோ பேயரே கேள்

ஆயான வானைப்புல் கிழங்கரைத்தே
அப்பியிடு கெசபுடத்தில் நீறிப்போகும்
நோயான உஷ்ணரோ கங்களெல்லாம்
நுகரவே யிருநேரம் வெண்ணெயாமே. 28.

வெண்ணெயிலே தானருந்த கனரோகம் போம்
மெய்யெல்லாங் குளிர்ச்சி தருந் தெளிவுண்டாகும்
எண்ணெயிலே தானருந்தக் கடுப்புத் தீரும்
எலும்புருக்கி யுள்வரட்சி யேகுமேகும்
உண்ணயிலே அத்தியுட சுரமுந் தீரும்
உள்ளுருக்கி யுள் மூல முலர்த்தல் போகும்
பண்ணவே பால்கருடப் பற்பத்தாலே
பறக்குமடா வெட்டையெல்லாம் பாருபாரே. 29.

**பொழிப்புரை :-**

ஆனைப்புல் கிழங்கரைத்து பால் கருடக்கல்லில் அப்பி கஜபுடம் போட நீறிப்போகும். வெண்ணெயில் கொள்ள கன ரோகம் போகும். மெய்யெல்லாம் குளிர்ச்சிதரும். தெளிவுண் டாகும். எண்ணெயில் அருந்த கடுப்புதீரும். மற்றும் எலும் புருக்கி, உள்வரட்சி, அத்திசுரம், உள்மூலம், வெட்டை முதலி யன தீரும்.

## கல்நார்பற்பம்

பார்ப்பதற்குக் கல்நாரின் பற்பங் கேளு
பகருகிறேன் கோங்கிலவின் பட்டைவாங்கி
ஆர்க்கவே யிடித்ததனை வைத்தேயோட்டி
லதன்மேலே கல்நாரை நடுவே வைத்து
வேர்ப்பொடியும் பட்டைபொடி மேலே போட்டு
மேலோடு மூடியல்லோசீலை செய்து
மூர்க்கமாங் கெசபுடத்தில் போட நீறும்
மூதண்டக் கல்நாரின் முறையைக் கேளே. 30.

முறையான பற்பத்தைத் தேனிற் கொள்ள
மூட்டோடே யசைந்தபல் லிறுகிப்போகும்
மறையான சேட்டுமத்தைப் யறுத்துப் போடு
மகலாத உஷ்ணத்தை யடக்கிப் போடும்

பிறையான நாளொன்றுக் கிருபோதுண்ணப்
பேரான சயமிருமல் சுவாசகாசம்
நிறையான மந்தார காச மேகும்
நேரான தூதளைலே கியத்திலென்னே. 31.

**பொழிப்புரை :-**

கோங்கிலவின் பட்டையை இடித்து ஓட்டில் வைத்து அதன் மேல் கல்நாரைவைத்து வேரின் பொடியை மேலேபோட்டு மேலோடு மூடி சீலைசெய்து கஜபுடம் போட பற்பமாகும். இதனைத் தேனில் கொள்ள அசையும் பல் இறுகிப்போகும். சேட்டுமத்தை நீக்கும்; உஷ்ணத்தை அடக்கும். தூதுளை லேகியத்தில் ஒரு நாளைக்கிருபோது வீதம் உண்ண சயம், இருமல், சுவாசகாசம் முதலியன அகலும்.

## நாக பற்பம்

என்னவே நாகபற்பத் தியல்பு கேளு
எலியாலின் பாலிலரைத் திடுசாமந்தான்
பன்னவே ரவியுலர்த்திக் காய்ந்தபின்னே
பரிவாக வோட்டில்வைத்துச் சீலை செய்து
முன்னமே சொன்னபடி புடத்தில் நீறும்
மூதண்ட பற்பத்தின் முக்கியங் கேள்
வன்னமாங் கிராணியொடு மூலரோகம்
வயிறெரிவு நெஞ்செரிவு வாய்வு ரோகம் 32.

வாயுவுட னிதற்கெல்லா மனுபானங் கேள்
வரிசையுடன் திரிகடுகு திரிபலாதி
தூ யதிலே லகிரி கஞ்சா பொடித்துச் சேர்த்து
தோய்தேனிற் றூவிமெள்ளப் பதமாய்க் கிண்டி
நோயதனை யறிந்துண்ண மண்டலந்தான்
நூற்பாக முன்சொன்ன ரோகந் தீரும்
பாய்கின்ற வெள்ளியுட பற்பங்கேளு
பாருற்ற ரூபாயை வாங்குவாயே. 33.

**பொழிப்புரை :-**

நாகத்தை காட்டாமணக்குப் பாலில் ஒருசாமம் அரைத்து சூரியபுடம் போட்டுக்காய்ந்தபின் முன்சொன்னபடி ஓட்டில் வைத்துக் கஜபுடம் போட பற்பமாகும். கிராணியுடன் மூல

ரோகம், வயிற்றெரிவு, நெஞ்செரிவு, வாயுரோகம் முதலியன விலகும்.

இதன் அனுபானம் திரிகடுகு, திரிபலா, கஞ்சாப்பொடி கலந்து தேனில் கலந்து பதமாய்க்கிண்டி நோயின் இயல்புக்குத் தக்கவாறு தருதல் ஆகும்.

## வெள்ளி பற்பம்

வாங்கியே செம்முள்ளி இலையரைத்து
மகிமையாய்க் கவசமதாய்ச் செய்து கொண்டு
தேங்கியே ரூபாயைக் குகையில் வைத்துச்
சில்லிட்டுச் சீலைசெய்து முழப்புடத்தில்
பாங்கியே யிட்டிடவே நீறிப்போகும்
படுபாவி வெள்ளியது பற்பமாச்சே
ஓங்கியே சிமிளுக்குட் பதனம் செய்து
உறவுகெட்ட குன்மமுட னீர்க்கட்டெல்லாம் 34.

நீர்க்கட்டுச் சதையடைப்பு மயக்கமோடு
நெஞ்சிலுள்ள கபமெல்லாம் நீங்கிப்போகும்
மூர்ச்செரியு மூச்செல்லா மடங்கிப் போகும்
மூக்கிலுள்ள நீர்ப்பாய்ச்சல் பீனிசங்கள்
பார்மண்டைச் சூலையொடு புரைகள் புண்கள்
பதுங்கிவிடும் வெள்ளியுட மகத்துவந்தான்
ஆரிந்த பற்பத்துக் கனுபானங்கேள்
ஆ ஆ ஆ வமுக்கிராச் சூரணந்தானாமே. 35.

**பொழிப்புரை :-**

செம்முள்ளி இலை அரைத்து வெள்ளியில் கவசமிட்டுச் சீலைசெய்து முழப்புடம் போட நீறிப் போகும். இதனைச் சிமிளுக்குள் பானம் செய்துவைக்க, குன்மம், நீர்க்கட்டு, மயக்கம், நெஞ்சுக்கபம், மூர்ச்செரிவு, பீனிசம், மண்டைச் சூலை, புரைகள், புண்கள் முதலியன அமுக்குராச் சூரணத்தை அனுபானமாகக் கொள்ள விலகும்.

## தங்க பற்பம்

ஆமிந்தத் தேனிலிடு மண்டலந்தான்
அகலாத நோய்களெல்லா மகன்றுபோகும்
ஓமிந்த தங்கபற்பஞ் சொல்லக்கேளு
உறுதியுள்ள தங்கக்கா சதனைவாங்கித்
தாமிந்த பனிதாங்கி மூலிதன்னைச்
சாந்துபோ லரைத்தப்பி யோட்டில் வைத்து
வாமிந்தச் சந்துவாய்ச் சீலைசெய்து
வைத்திடவே கெசபுடத்திற் பற்பமாச்சே. 36.

ஆச்சிந்தப் பற்பத்தை யெடுத்துக்கொண்டே
யளவிறந்த வித்தைதனை யாடலாகும்
பாச்சிந்த வகையறிந்து வேதை தன்னைப்
பாய்ச்சினா லேழரைதான் காணுங்காணும்
வாய்ச்சிந்தச் சொர்ணபற்பம் வியாதிக் கெல்லாம்
வகையறிந்தே யனுபான மறிந்து கூட்டுக்
காய்ச்சிந்த வனுபானஞ் சொல்லக்கேளு
கண்டாத்திரி லேகியத்திற் கொண்டிடாயே. 37.

கொண்டாக்கால் சேட்டுமங்கள் தொண்ணூற்றாறும்
குடிபோறோ மென்றுசொல்லி கூட்டோடே போம்
கண்டாக்கால் சயரோகம் காசரோகம்
கபமீளை யுண்மாந்தை கட்டோடேபோம்
உண்டாக்காற் றிரிகடுகு லேகியத்தில்
உறவுகெட்ட குன்மமொடு மகோதரங்கள்
சென்றாக்கால் வாயுநீ ராம்பல் சூலை
சிரசுநோய்க் கண்ணோயுந் தீரும்பாரே. 38.

தீருமே குட்டமொடு குறைநோயெல்லாந்
திறமாக லேகியத்திற் கொண்டிட் டாக்கால்
பாருமே சூலையொடு கிரந்தி குட்டம்
பறக்குமே தேனிலிரு பதுநாளுண்டாற்
றேருமே நீரிழிவு பிரமேகந்தான்
தெளிவாகச் சீந்திற்சூரணத்தி லுண்ண
வாருமே நெல்லிக்கா யிலேகியத்தில்
வைத்துமெள்ளக் கொண்டிடவே பித்தம்போமே. 39.

போகுமே சிவவேம்பின் சூரணத்திற்
புகட்டவே புண்புரைகள் சில்விஷங்கள்
ஆகுமே வண்டுகடி விடங்களெல்லாம்
ஆச்சரியம் வேம்பின் சூரணத்திற்கொள்ள
வேகுமே வாதமென்ற வெண்பதுந்தா
னெடுத்தடுத்த நோய்களெல்லா மேங்கிப்போகும்
வாகுமே யனுபான மறிந்து செய்தால்
வருகின்ற நோய்தீருஞ் சொர்ணமாமே 40.

**பொழிப்புரை :-**

தங்கக் காசை பனிதாங்கியை (தண்ணீர்விட்டான்) மைபோலரைத்துக் கவசமிட்டு ஓட்டில் வைத்துச் சீலைசெய்து கெஜபுடம் போடப்பற்பமாகும். இந்தப் பற்பத்தினால் அளவற்ற வித்தைகள் ஆடலாம். முறையறிந்து பயன்படுத்த ஏழறை மாற்றுவரை வேதைவித்தை செய்தல் கூடும். கண்டங்கத்தரி லேகியத்தில் கொள்ள தோண்ணூற்றாறு சிலேத்தும நோய்களும் கூண்டோடு ஓடும். சயரோகம், காசரோகம், கபம், ஈளை, உள்மாந்தை முதலியவையும் அகலும். திரிகடுகு லேகியத்தில் கொள்ள குன்மங்கள், மகோதரங்கள், வாயு, சூலை, சிரசுநோய், கண்ணோய் முதலியனவும் தீரும். தேனில் இருபது நாள் உண்டால் சூலையொடு, கிரந்தி, குட்டம் முதலியன விலகும். சீந்தில் சூரணத்தில் கொள்ள நீரிழிவு, பிரமேகம் முதலியன விலகும். நெல்லிக்காய் லேகியத்தில் கொள்ள பித்தம் போகும். சிவ வேம்பின் சூரணத்தில் கொண்டால் புண்புரைகள், சில் விஷங்கள், வண்டுகடி, விஷங்கள் முதலியனவும், வேம்பில் கொள்ள வாதநோய்கள் எண்பதும் விலகும். அனுபானம் அறிந்து உட்கொண்டால் நோய் நீங்கி தேகம் சொர்ணம்போலாகும்.

சொர்ணமது தின்றாக்கால் சொர்ணம் போலாஞ்
சுகமாக விரும்புதின்றால் இரும்பு போலாம்
அற்பமா மன்னமுண்டா லழிந்துபோகும்
ஆசையது மிகுந்தாக்காற் பிறவிதீரா
வர்ணமது பிரிந்தாக்கால் வலுமைபாழா
மானிலத்தி லிருந்தாக்காற் றவசுபாழாம்
வர்ன பொன்னை மறந்தாக்கா லெந்தப்பேர்க்கு
மகாதிவ் விதமாகப் பொன்னை நீற்றே. 41.

**பொழிப்புரை :-**

சொர்ண பற்பம் தின்றால் தேகம் சொர்ணம் போலாம்; இரும்பு பற்பம் தின்றால் தேகம் இரும்புபோலாம். சோற்றாசைப் படுவார்க்கு உடலழிந்துபோகும். பல்திறனாய ஆசையே பிறவிக்குக் காரணமாம். பற்பத்தின் வண்ணம் மாறின் உடலின் வலிமை குன்றும். இவ்வுலக வாழ்வின் பற்றே தவத்தைப் பாழக்கும்.

## கந்தக பற்பம்

நீற்றுதற்குப் பின்னுமொரு சேதிகேளு
நேராக கந்கத்தின் பற்பஞ் சொல்வேன்
ஏற்றுகின்ற சிறுசின்னி தனையரைத்தே
யெலுமிச்சங் காயளவாய்க் குகையே செய்து
தோற்றுகின்ற ரவியதனிற் காயப் போட்டுச்
சுகமாக வுலர்ந்தபின்பு சொல்லக்கேளு
சாற்றுகின்ற கெந்தகத்தின் கட்டிவாங்கித்
தளமான குகைக்குள்வைத்துச் சில்லுபோடே. 42.

சில்லிட்டுச் சீலைசெய்து குக்குடத்திற்
றீர்ந்தாறி யெடுத்துப்பார் செயபற்பந்தான்
மல்லிட்டு வாதாடி வந்த நோய்கள்
மயங்கியே யோடுவதற் கனுபானங்கேள்
நெல்லிட்ட நெல்லிடைதான் தேனிற்கொள்ள
நிலையான குட்டமொடு குறைநோயெல்லாம்
பல்லிட்டுக் கடித்ததொரு சில்விடங்கள்
பாரித்த வாய்வோடு வாதம் போமே. 43.

வாதத்தி னாலெழுந்த கிரந்தி சூலை
வயிற்றுவலி நீர்ப்பெருத்த மகோதரங்கள்
சூதத்தால் வந்ததொரு கர்ப்ப ரோகம்
சுழற்றியே யாற்றிவிடுங் கண்டாற் போலே
பாதத்தில் வீக்கமுள்ள பாண்டு ரோகம்
பறக்குமப்பா பற்பத்தால் பாருபாரு
தாதுற்ற விடுப்புவலி சந்து வாதந்
தசையிலுள்ள நீரெல்லா மற்றுப்போமே. 44.

**பொழிப்புரை :-**

சிறு சின்னியை அரைத்து எலுமிச்சங்காயவளாய்க் குகை செய்து சூரியனில் காயப்போட்டு உலர்ந்தபின்பு கந்தகக் கட்டி யைக் குகையிலிட்டுச் சீலைசெய்து குக்குடப்புடம் போட்டு எடுக்க பற்பமாகும். இந்தக் கந்தகபற்பத்தை நெல் எடை தேனில் கொள்ள குட்டம் முதலான குறைநோய்கள், விஷங்கள், வாயு முதலியவாதநோய்கள், வாயுவினால் எழுந்த கிரந்தி சூலை, வயிற்றுவலி, மகோதரங்கள், சூதகத்தால் வந்த கர்ப்பரோகம், பாண்டுரோகம் முதலியன பறந்து போகும்.

## மண்டூர பற்பம்

அத்ததொரு மண்டூர பற்பஞ் சொல்வேன்
அதிகமாஞ் சொரி சுணங்கை யரைத்துப்பூசி
வைத்திடவே மண்குகையில் சில்லுப்போட்டு
வளமாக சீலையொன்று வாயில் செய்து
பத்தியுடன் கெசபுடத்திற் கூகைநீரின்
பரிவதுபோல் கண்மணியே நீறிப்போகும்
புத்தியுட னிதையெடுத்து வைத்துக்கொண்டு
புனிதமாய்த் தேனதிலே புசித்திடாயே. 45.

புசித்திடவே பணவெடைதான் தேனிற்கொள்ளப்
போரற்ற பாண்டுவகை பொல்லாவீக்கம்
நசித்திடவே பண்ணுவிக்கு மண்டூரந்தான்
நாடாது சயரோக மந்தாரகாச
முசித்திட்ட விஷப்பாகம் விஷநீரெல்லாம்
மூட்டோடே பிடுங்கிவிடு மூர்க்கமெத்த
உதித்திட்ட வஞ்சனக்கல் பற்பஞ் சொல்வே
னொருபிடியாஞ் சிறுகீரை குகையைப் பண்ணே. 46.

**பொழிப்புரை :-**

மண்டூரத்தின் மேல் சொரிசுணங்கை அரைத்துப்பூசி மண் குகையில் சில்லுப்போட்டு சீலைசெய்து கெஜபுடம் போட பற்ப மாகும். இந்தப் பற்பத்தைத் தேனில் பணஎடை கொள்ள பாண்டுவகை, சயரோகம், விஷநீர் முதலியன தீரும்.

## அஞ்சனக்கல் பற்பம்

பண்ணியந்த வஞ்சனக்கல் நிறையவிட்டுப்
பரிவான மூலிகையை யரைத்துமூடி
ஒண்ணியமண் சீலைசெய்து கெசபுடத்தில்
உறுதியுள்ள சங்கதுபோல் நீறிப்போகும்
தண்ணியிலே போட்டவுடன் மிதக்கும்பாரு
சலமான மேகவகை இருபதுக்கும்
எண்ணியே தேனிலிடு வியாதியானால்
யென்ன சொல்வேன் நீர்போன போக்குத்தானே 47.

**பொழிப்புரை :-**

அஞ்சனக்கல்லின் மேல் பொருத்தமான மூலிகையை (துளசி, அரைக்கீரை, குப்பைமேனி) அரைத்துமூடி சீலைசெய்து கெச புடம் போடப் பற்பமாகும். தண்ணியில் போட்டால் மிதக்கும். இதனைத் தேனில் கொள்ள மேகவகை இருபதும் பறந்துபோம்.

## தாளக பற்பம்

போக்கான தாளகத்தி னீற்றைச் சொல்வேன்
புதியதலை யோடதனைப் பொடித்துக் கொண்டு
நீக்கான சுண்ணாம்புத் தண்ணீர் விட்டு
நினைவாகத் தானரைத்துக் குகைபோற்பண்ணி
வாக்கான மேல்மூடி யொன்று செய்து
வண்மையாய்க் காயவைத்தே யதனுட்கேளு
பாக்கான தாளகத்தின் கட்டி வைத்துப்
பரிவாகச் சீலைமண் செய்துலர்த்தே. 48.

உலர்ந்தபின்பு குக்குடத்தில் நீறிப்போகும்
உத்தமனே தாளகத்துக் கொப்பு முண்டோ
மலர்ந்ததொரு மல்லிகைப்பூப் போலாம் வெள்ளை
மாசற்ற நீறதனை வைத்துக் கொண்டே
அலர்ந்தமலர்த் தேனதிலே கொள்வீராகில்
அரிதான சயரோக மந்தாரகாசங்
கலந்தகப முள்மாந்தை யிருமலீளை
கரைகடந்தே யோடிப்போங் கண்டுகொள்ளே. 49.

கண்டுகொண்டே யனுபான மறிந்து செய்தாற்
காணாத கடிவிடமுங் குறைநோய் குட்டம்
வண்டுகடி எலிவிடங்க ளெல்லாந்தீரும்
மைந்தனே அனுபான மறிந்துபோடு
பண்டான சாதிலிங்கந் தன்னை நாளும்
பற்பமாய் நீற்றுகின்ற பண்டைப்பாரு
எண்டிசையி லுள்ளவரா னீற்றப்போமோ
செகமெய்க்க நீறதனைச் செய்யக்கேளே. 50.

**பொழிப்புரை :**

புதியதலையோட்டைப் பொடித்துக்கொண்டு சுண்ணாம்புத் தண்ணீர்விட்டு அரைத்துக் குகைபோல் செய்து காயவைத்து அதனுள் தாளகத்தின் கட்டிவைத்து சீலைசெய்து குக்குடப்புடம் போடப்பற்பமுண்டாகும். இதனைத் தேனில் கொள்ள சய ரோகம், ஈளை, இருமல் முதலியன ஓடிப்போம். தக்க அனுபானம் அறிந்து இந்தப்பற்பத்தைக் கொடுக்கக்காணாக் கடிவிடம், குறைநோய், குட்டம், வண்டுகடி, எலிக்கடி முதலியன அகலும்.

## சாதிலிங்க பற்பம்

செய்யதொரு சாதிலிங்கக் கட்டி வாங்கிச்
சிவமூலி வேர்ப்பட்டையைக் குகையாய்ச் செய்து
வெய்யதொரு கட்டியதில் வைத்துமூடி
விதமுடனே சந்துவாய்ச் சீலைசெய்து
பய்யவே குக்குடத்தி னீறிப் போகும்
பரிவுடனே நிறுத்துப்பா ரெடைதான்போகா
துய்யவே நோயெல்லாந் தீரவேண்டி
துறையான வனுபான மொன்று கேளே. 51.

## வேறு

ஒன்றுதான் தேனிற் கொள்ள வுறுதியாங் குன்ம வாய்வு
பண்டுள்ள சன்னி வாதம் பாரிச வாய்வு சூலை
என்றிடு மீளை தன்னோ டிளைப்பதும் விரைந்து போகும்
உண்டிடு மனுபா னங்க ளுகந்துநீ கண்டிடாயே. 52.

**பொழிப்புரை :-**

சிவனார் வேம்பு வேர்ப்பட்டையைக் குகைசெய்து சாதிலிங்கக் கட்டியை அதில் வைத்து மூடிச் சீலைசெய்து குக்குடப் புடம் போடச் சாதிலிங்கம் பற்பமாகும். இதனைத் தேனில் கொள்ளக் குன்மவாயு, சன்னிவாதம், பாரிசவாயு, சூலை, ஈளை, இளைப்பு முதலியன அகலும்.

## வீர பற்பம்

உகந்திடும் வீர பற்பம் வுரைக்கிறே னுறுதியாக
சகந்தனி லப்பை யின்றன் கிழங்கினைக் குகைபோற் செய்தே
இகந்தனில் வீரந் தன்னை யிசையவே யதனுள் வைத்துப்
பகரந்திடுஞ் சில்லு மூடிப் பாகமாய்ச் சீலை செய்யே. 53.

செய்யவே குக்குடத்தில் தீர்க்கமாய் நீறிப்போகும்
மெய்யவே பணவெடைதா னியல்புடன் தேனிற் கொள்ள
அய்யது சூலைகுன்ம மகன்றிடும் வாய்வு போகும்
மெய்யிது சொன்னேன் காரப் போக்கினை விரைந்து
கேளே. 54.

**பொழிப்புரை :-**

கலப்பைக் கிழங்கைக் குகைபோல் செய்து வீரத்தை அதனுள் வைத்து சில்லுமூடிச்சீலை செய்து குக்குடப்புடம் போட வீரம் பற்பமாகும். இந்தப் பற்பத்தில் பணஎடை தேனில் கொள்ளச் சூலை, குன்மம், வாயு முதலியன அகன்றுபோம்.

## பொரிகாரப் பற்பம்

விரைதிடும் பொரிகாரத்தின் கட்டியை மதித்து வாங்கி
உறைந்திடுஞ் சங்கை நீற்றி யுகந்துநீர் விட்டரைத்து
நிறைந்திடுங் குகையாய்ப் பண்ணி நேர்பொரிக் காரம்
வைத்து
குறைந்திடுஞ் சீலை செய்து குக்குடம் வைத்திடாயே. 55.

வைத்திடக் காரம் நீறும் வளமிதுக் கனுபானங்கேள்
நித்தமுந் தேனிற் கொள்ள நீர்க்கடுப் புடனே மாறும்
மெத்தன சல மிறங்கு மிசைந்தகல் லடைப்புந் தீருந்
துத்திடுஞ் சதையடைப்புத் திறந்துநீர்த் தோடம் போமே.
56.

**பொழிப்புரை :-**

சங்கை பற்பம்செய்து நீர் விட்டரைத்துக் குகைசெய்து பொரிகாரத்தை உள்வைத்துச் சீலைசெய்து குக்குடப்புடம் போடப் பற்பமாகும். இப்பொரிகார பற்பத்தைத் தேனில் தினமும் கொள்ள நீர்க்கடுப்பு மாறும். சலமிறங்கும், கல்லடைப்பு தீரும், சதையடைப்பு திறந்து நீர்த்தோடம் போகும்.

## சாத்திரபேதி பற்பம்

போமென சாத்திரபேதி புகல்கிறேன் புனிதமாக
வாமென முலைப்பால் விட்டே யவ்வெடை யெருக்கம் பாலால்
ஆமென நாலு சாமம் மதித்தரைத் துண்டை செய்து
நாமென குக்குடத்தில் நாட்டிட நல்ல நீறே. 57.

நல்லதோர் நீறதனை நாட்டுவா யிஞ்சிச் சாற்றில்
வல்லதோர் சுரமுந் தீரும் மருவிய பாலிற் கொள்ள
முல்லையி னகையினாளே முழங்கிய சுரங்கள் போகும்
வெல்லதோ ருஷ்ண மெல்லாம் விலகிடும் வெண்மை தானே. 58.

**பொழிப்புரை :-**

தாய்ப்பாலாலும் பின்னர் எருக்கம் பாலாலும் சாத்திர பேதியை நாலுசாமம் அரைத்து உருண்டை செய்து முறைப்படி குக்குடப்புடம் போட சாத்திரபேதி பற்பமாகும். இதனை இஞ்சிச்சாற்றில் கொள்ள சுரம் தீரும். பாலில் கொள்ள மிகு உஷ்ணத்தால் வரும் நோய்கள் விலகும்.

## வெண்குந்திரிக பற்பம்

வெண்மை குந் திரிக்க நீற்றை விளம்புவேன் விரைந்து கேளு
பண்ணியின் பாலை விட்டு பரிந்தரைத் துண்டை செய்து
அண்ணலே யோட்டில் வைத்து அதன்மேலே யோடு மூடி
மண்ணது சீலை சுற்றி வைத்திடு குக்குடத்தில். 59.

குக்குடந் தன்னிற்றானே கூகைநீ றொப்பதாகும்
மிக்கநீ றதனை வெண்ணெய் தன்னிலே யருந்து வீரேல்
தக்கபடி கடுப்புரத்தந் தானது பறந்து போகுஞ்
சிக்குள்ள புண்ணுந் தீருஞ் சிந்தையி லுன்னிப் போடே. 60.

போடவே பல்லி னோவும் புண்ணெனு மனைத்தி னோடுஞ்
சூடது கொண்ட புண்ணுஞ் சூலையின் ரணங்கள் போகும்
ஆடிடுந் தந்த மெல்லா மாணிபோ லுறுத்து நிற்கும்
சேடுவெண் குந்திரிக்கஞ் செய்திடுந் திறங்க டானே. 61.

**பொழிப்புரை :-**

வெண்குந்திரிகத்தைப் பன்றியின் பால்விட்டரைத்து உருண்டைசெய்து ஓட்டில் வைத்து ஓடுமூடிச் சீலைசெய்து குக்குடப்புடம் போட பற்பமாகும். இந்தப்பற்பத்தை வெண்ணெயில் அருந்தப் பல் தொடர்பான நோய்கள் அகலும். ஆடும்பற்கள் சுவரில் பதிந்த ஆணியைப்போல் உறுதியாகும்.

## பவழபற்பம்

திறந்திடும் பவழ பற்பம் செய்கிற திறந்தான் கேளு
சிறந்த தோர் முயலின் ரத்தந் தீர்க்கமாய் விட்டே யாட்டிக்
குறைந்திடா வில்லை செய்து குலாவியே யோட்டில் வைத்து
மறைந்திட வோடு மூடி வைப்பாய்க் குக்குடத்திற்றானே
62.

தானது நீறி வெள்ளைச் சதுர்முகன் போலே யாகும்
ஆனதோர் நீற தன்னைப் பணவெடை யனுபானங்கே
ளேனமாந் தேனி னோடு தூதுளை நீரிற் கொள்ள
மானமாங் குழலி னாளே சயங் கபமகன்று போமே. 63.

அகன்றிடு மிருமற் காச மதிகமாம் பவழ பற்பஞ்
புகன்றிடப் போகுமப்பா புனிதமா மிந்த நீற்றை
செகத்தினிற் செய்ய மாட்டார் செப்பினே னுலகத் தோர்க்கு
நிகண்டது போலா நூலை நுணுக்கமாய் நிகழ்த்தினேனே.
64.

நிகழ்த்தினே னுணுக்கமாக நினைவொடு பவழ பற்பஞ்
செகத்தினி லாருங் காணார் செப்பினேன் சூட்சமாக
அகத்தினி லிருந்து கொண்டே யாடலாங் கோடி வித்தை
மகத்துவ மிந்நூல் போல வைத்தியங் கண்டிலேனே. 65.

**பொழிப்புரை :-**

பவழத்தில் முயல்ரத்தம் விட்டு தட்டி வில்லைசெய்து ஓட்டில்வைத்து மேல் ஓடுமூடிச் சீலைசெய்து குக்குடப்புடம் போடப் பவழம் பற்பமாகும். இப்பற்பத்தைத் தேனிலும் தூது வேளைச்சாறிலும் பணஎடைகொள்ள சயம், கபம் முதலியன அகலும்.

## வைர பற்பம்

கண்டதோர் வைரந் தன்னை கதுமையா யுரைக்கக் கேளு
பெண்டுகள் சுரோணி தத்தைப் பேணிவார்த் தரைத்து வில்லை
நன்றதாய்ச் செய்துலர்த்தி நாடியே யோட்டால் மூடி
சென்றிடக் கெசபுடத்தில் தீர்க்கமாய் நீறிப் போமே. 66.

நீறிய நீறு தன்னை நினைவதாய் தேனிற் கொள்ள
ஊறிடுந் தேக மெல்லா முற்றதோர் வைரம் போலா
மாறிடு மேனி யெங்கும் வச்சிர காயமாகும்
கூறிடும் ரத்ன மெல்லாம் கட்டியாய் நீற்றக் கேளே. 67.

**பொழிப்புரை :-**

வைரத்தைச் சுரோணித (பூநீறு)நீரில் அரைத்து வில்லைதட்டி உலர்த்தி ஒட்டில் இட்டு ஓட்டால் மூடி கெசபுடம் போடப் பற்பமாகும். இந்த வைரபற்பத்தை தேனில் கொள்ள தேகம் வைரம் போலாகும்.

## இரத்தின பற்பம்

கேளது பவழப் புத்தைக் கிளர்முன்போ லரைத்துக் கொண்டே
ஆளது குகையாய்ப் பண்ணி யதனுள்ளே வைரம் வைத்துச்
சூளது சில்லுப் போட்டுச் சுற்றியே சீலை கட்டி
நாளது குக்குடத்தில் நாட்டிட நீறிப்போமே. 68.

போமது நீறிற் றானால் புவியினிற் காட்ட வொண்ணா
ஆமது ரத்ன நீறு மதிகமாய்ச் சித்தர் செய்வார்
நாமது திறந்து சொன்னோம் நாட்டினில் மனுவோர்க்காக
வோமிதுக் கனுபானங்க ளறிந்திட வுறுதியாமே. 69.

**பொழிப்புரை :-**

பவழப்புற்றை முன்சொன்னதுபோல் அரைத்துக் குகை செய்து அதனுள்ளே வைரத்தை வைத்து சில்லுப்போட்டுச் சுற்றிச் சீலைகட்டி குக்குடப் புடம் போடப் பற்பமாகும். இந்த இரத்தின பற்பத்தைச் சித்தர்களே செய்வார்கள். புவியில் உளார்மேல் கருணைகூர்ந்து இங்குசொன்னேன். அனுபானம் அறிந்து இப்பற்பத்தைப் பயன்படுத்துக.

## பாடாண பற்பம்

உறுதியா மிந்த நீற்றா லொழித்திடும் வியாதியெல்லாம்
மறுதியாம் பாடாணத்தி னீறதை யறையக் கேளு
சுருதியா மண்டத் தோட்டைச் சுண்ணமாயூதிக்கொண்டு
கருதியே குகையாச்செய்து கட்டியைப் பேணி வையே. 70.

பேணியே வைத்த பின்பு வெள்ளெருக் கதனைப் பேசில்
ஆணியாம் பாலைவிட்டே யதன்மேலே சில்லுப் போட்டுப்
பூணியே சீலை செய்து குக்குடப் புடமதாக
வாணியே யிடுவாயானால் மாசற்ற பற்பமாமே. 71.

**பொழிப்புரை :-**

அண்டத் தோட்டைச் சுண்ணமாய் ஊதிக்கொண்டு குகை செய்து பாடாணக்கட்டியை வைத்து வெள்ளெருக்கம் பால்விட்டு அதன்மேல் சில்லுப்போட்டு சீலைசெய்து குக்குடப்புடம் போடப் பாடாணம் பற்பமாகும்.

பற்பத்தி னெடையே சூதம் பாய்ச்சியே முலைப்பால்விட்டு
நற்புட னரைத்துவில்லை நயம்பட வுலர்த்திக் கொண்டே
உற்பன வோட்டில் வைத்தே யுபாயமாய்ச் சீலை செய்து
கற்பகக் களிற்றைப் போற்றிக் குக்குடங் கருதிக்கொள்ளே.
72.

கொள்வது நீற்றை நன்றாய்க் கூறுவேன் வெள்ளீயத்தி
லள்வது பலந்தனக்குப் பணவெடை வீதமாக
உள்வது உருகும் போது கொடுத்திட வுரிந்து கொள்ளு
மெள்வது துய்ய ரூபாய் விலையதற் கதிகந் தானே. 73.

தானென்ன சுரத்துக் கெல்லாம் பாலினிற் றாக்கி னாக்கா
லூனென்ன நாழி கைக்குள் குளிர்சுர மோடிப் போகும்
னானென்ன விந்த நீற்றை நாட்டினி லுரைக் கொணாது
பானெனத் தெளிந்த நூலைப் பத்திரப் படுத்திவையே. 74.

**பொழிப்புரை :-**

பற்பத்தின் எடை ரசம் பாய்ச்சி தாய்ப்பால்விட்டு அரைத்து வில்லைதட்டி உலர்த்தி ஓட்டில் வைத்து ஓடுமூடி சீலைசெய்து குக்குடபுடம் போடப் பற்பமாகும். இப்பற்பத்தைப் பாலை அனுபானமாகக் கொண்டவுடன் குளிர்சுரமெல்லாம் விலகும். அரிதான இந்தப் பற்பத்தின் பெருமையைச் சொல்லிமுடியாது. ஆதலின் இதனைப்பத்திரப்படுத்துவாயாக.

## சாரநீறு

வைத்திடுஞ் சார நீற்றை மைந்தனே மகிழ்ந்து கேளாய்
எத்திடும் புளியஞ் சாம்பல் யெடுத்ததை யுப்பாய்க் காய்ச்சி
சத்திடுங் குப்பை மேனிச் சாறுவிட் டரைத்து நன்றாய்
அத்திடுங் குகையுண்டாக்கி யதனுள்ளே வைத்து மூடே. 75.

மூடியு மதனாற் செய்து முசியவே சீலை கட்டி
ஆடிடக் குக்குடத்தி லழகதாய் நீறும் நீறும்
தேடினாற் கிடையா திந்தச் செகந்தனிற் சார பற்பம்
வாடிடும் வாதியே கேள் வகையுட னீற்று வாயே. 76.

வாயது பேசி னாக்கால் வாய்க்குமோ சாரநீறு
நோயது கொண்டவாதி சாரத்தினுணுக்கங் கேளு
காயது நாகந் தானுங் கண்டிறந் தாடிச் சாகும்
பேயது கொண்டவாதி பேசாதே பேணிப் பாரே 77.

பாருள்ள நோய்கள் தீரப் பாய்ச்சிடு தேனிலேதான்
சீருள்ள மகோதரங்கள் வாயுவின் றிரட்சியோடு
நீருள்ள வாம்பல் வீக்கம் நிச்சயம் கர்ப்ப ரோகம்
ஊருள்ள குன்மமெல்லா மோடிடுமுலகத் தோர்க்கே. 78.

**பொழிப்புரை :-**

புளியஞ்சாம்பல் எடுத்து உப்புக்காய்ச்சி அதில் குப்பை மேனிச் சாறுவிட்டரைத்துக் குகையுண்டாக்கி அதனுள்ளே சாரத்தை வைத்து மூடி சீலைசெய்து குக்குடப்புடம் போடப் பற்பமாகும். இந்தப் பற்பத்தால் நாகமும் கழியும், தேனை அனுபானமாகக் கொள்ள மகோதரங்கள், கர்ப்பரோகம், குன்மம் முதலியன அகலும்.

## உப்பு பற்பம்

உலகத்தி லுப்பி னீற்றை யுரைக்கிறே னறுதியாகச்
சலம்பெற்ற லவணந் தன்னைச் சிறந்த தோர் கட்டிவாங்கி
மலைபெற்ற வன்னிப்பட்டை யிடித்ததை மாவதாக்கி
நிலைபெற்ற வோட்டிலிட்டு நேர்ந்துப்பை நடுவே வையே.
79.

வைத்ததோர் கட்டி மேலே வன்னிதன் பட்டைத் தூளை
உத்ததோர் கீழ்மே லிட்டே யோட்டின்மே லோடு மூடி
முத்தவே சீலை செய்து முன்புடங் கோழி யிட்டே
அத்தபின் னெடுத்துப் பார்க்க வதிகமாம் பற்ப மாமே. 80.

அதிகமாம் பற்பந் தன்னை யருந்திட திசவாய் வெல்லாம்
பதியைவிட் டோடிப் போகும் பாரிச வாய்வு சூலை
கதிகெட்ட மகோதரங்கள் கனத்திடும் நீர்த்தோ ஷங்கள்
மதிகெட்டே யோடிப் போகு மகிழ்வதற் கின்ன
முண்டோ 81.

உண்டென வுரைத்த செய்தி யுறுதியாய்ச் சொல்லக்
கேண்மின்
அண்டர்கள் போலா மிந்த வதிசய முப்பு நீறு
தெண்டிசை முழுதும் வாழச் செப்பினேன் பற்பந்தன்னை
யுண்டிட வெள்ளிச் செம்பிற் கழஞ் சதற் கொருமா
வீயே 82.

ஈய்ந்திட வயதைந் தாகும் யெடுத்திட வாணிக் கெல்லாம்
தேய்ந்திட வறுத்தாயானால் தெளிந்திடுந் தங்க மாகும்
காய்ந்திடுங் கசடருக்கு காட்டாம லிந்த நூலை
ஆய்ந்திடும் பெரியோர்க் கீய்ந்தா லறம்வரு மதிக மாமே. 83.

**பொழிப்புரை :-**

மலைமூங்கில் பட்டையை இடித்துமாவாக்கி ஓட்டில் இட்டு உப்புக்கட்டியை நடுவில் வைத்து அக்கட்டியின் மேலும் கீழும் வன்னியின் பச்சைத்தூளை போட்டு ஓட்டின்மேல் ஓடுமூடி சீலை செய்து கோழிபுடம் போடப் பற்பமாகும். இந்தப் பற்பத்தைத் தக்கபடி உண்ண பாரிசவாயு சூலை, மகோதரம், ஜலத்தோஷம் முதலியன அகன்றுபோம். தேவர்க்குரிய இந்தப்பற்ப வெள்ளி, செம்பிற்கு கழஞ்சுக்கு ஒரு மா கொடுக்க ஐந்து மாற்று ஆகும். கீழோர்க்குக் கூறாமல் பெரியோர்க்குக் கூறுவாயாக.

## ஆமையோடு பற்பம்

ஆமையோ டதனை நீற்ற வருடனைச் சொல்லக் கேளு
பூமிவேர் தனை யரைத்துப் பொருந்திடக் கவசஞ் செய்தே
ஆமிதை யதனுள் வைத்தே யழகதாய்ச் சில்லுப் போட்டு
தாமுமே குக்குடத்திற் றாக்கிடத் தவளநீறே. 84.

தவளமா நீற்ற லான சகஸ்திர பிராணி நீற்றைக்
கவளமாய் தேனி லிட்டாற் கண்கனோய்த் தொண்ணுற்றாறு
முவளமா யோடிப் போகு முயலகன் ரோகந் தீரும்
பவளமா மிந்தப் பற்பம் பாரினி லதிகந் தானே. 85.

**பொழிப்புரை :-**

பூமிவேர் (நாக்குப்பூச்சி) அரைத்து ஆமையோட்டைக் கவசம் செய்து சில்லுப் போட்டு முன்சொன்னபடி குக்குடப்புடம் போட பற்பமாகும். தேனில் குழைத்து போடத் தொண்ணுற்றாறு விதக் கண்நோயும் அகலும். முயலகன் எனும் நோயும் அகலும்.

## முத்து பற்பம்

தானெனு முத்து நீற்றைச் சாற்றுறேன் தரணி யோர்க்கு
மானெனு மண்ட நீரால் மகிழ்ந் தரைத் துண்டை செய்து
நானென வோட்டில் வைத்து நாடியே சீலை மூடி
வானென குக்குடத்தில் வைத்திடச் சுண்ணமாமே. 86.

சுண்ணமா முத்து நீற்றை வெற்றிலை தன்னிற் பூசி
அன்னமே தாம்பூலத்தை யருந்திட வதிக மாகும்
முன்னமே பல்லிறுகுஞ் சீலேற்பன முழுதுந் தீரும்
வன்னமாந் தேகத் துக்கு வாய்த்திடுஞ் சுண்ண மாமே. 87.

**பொழிப்புரை :-**

வெண்கருவினால் முத்தினை அரைத்து உருண்டை செய்து ஓட்டுள்வைத்துச் சீலை செய்து குக்குடப்புடம் போடச் சுண்ண மாகும். இந்தப் பற்பத்தை வெற்றிலையில் வைத்துத் தாம்பூல மாகக் கொள்ள வலிமைமிகும், பல் இறுகும், நீரிழிவு தீரும்.

## கற்பூர பற்பம்

வாய்த்திடும் பிரமேகங்கள் வந்தநீரழிவு தீரும்
சாய்ந்திடுங் கற்பூ ரத்தை சாற்றுவேன் சுண்ணமாக்க
காய்த்தகற் பூரவள்ளிச் சாறது வார்த் தரைத்துத்
தோய்த்திடும் வட்ட தாக்கி ரவியினிற் காயச் சொல்லே
88.

சொல்லிய வட்ட வோட்டில் துலங்கவைத் தோடு மூடி
நல்லதோர் சீலை செய்து நாட்டியே புடந்தான் கோழி
மெல்லியே யெடுத்துப் பார்த்தா லியல்புள்ள சுண்ண மாகும்
வல்லிவெற் றிலையிற் றின்றால் வச்சிர காயமாமே. 89.

காயமும் வலுத்துப் போகும் கசடது மற்றுப் போகும்
வாயினில் ரோகந் தீரும் வருந்திய கபமு மேகும்
மாயமாம் வாய்வு போகும் மலசலக் கட்டுந்தீரும்
நேயமாய்க் கண் துலங்கும் நிச்சய மிது சொன்னேனே. 90.

**பொழிப்புரை :-**

கற்பூரவல்லிச்சாறு வார்த்துக் கற்பூரத்தை அரைத்து வட்ட தாக்கிச் சூரியபுடம் போட்டு, ஓட்டுள்வைத்து ஓடு மூடி சீலை செய்து கோழிப்புடம் போடச் சுண்ணமாகும். வெற்றிலையில் வைத்துத் தின்ன காயம் வச்சிரம் போலாம்; கசடற்றுப் போகும்; வாயினில் சகலரோகமும் போகும்; கபம், வாயு, மலசலக்கட்டு, கண் பற்றிய நோய்கள் முதலியன அகலுவது உறுதியாகும்.

## துருசு பற்பம்

நிச்சய மாகச் சொல்வேன் நீலமாந் துருசுப் போக்கு
வச்சதோர் வங்கத் தோடே யெடைக்கெடை சூதம் வார்த்து
மெச்சுமந் தெடைக்கு நல்ல வெடியுப்புங் கூட்க் கூட்டி
உச்சவாய் நீரினாலே யுறவரைத் துலர்த்தி வட்டாய் 91.

வட்டமா யோட்டில் வைத்து வளையவே சீலை செய்து
திட்டமாய்க் குக்குடந்தான் தீர்த்திடச் சுண்ண மாகும்
முட்டவே சிவந்து போனால் முறைப்படி யுப்பைக் கூட்டிச்
சட்டமா யரைத்து முன்போற் புடமிடச் சுண்ணமாமே. 92.

சுண்ணத்தை வாய்நீ ராலே சுழற்றியே யரைத்துக் கொண்டே
அன்னத்தை துருசுக் கட்டிக் கப்பியே ரவியிற் போட
முன்னொத்த மூன்று நாளில் முழுவெள்ளை யாகும் பாரு
பொன்னொத்த சீலை செய்து போட்டிடு காடை யென்றே 93.

என்றிதை யெடுத்துப் பார்க்க வியலுள்ள சுண்ண மாகுங்
கண்களாற் கண்ட பேர்க்கு கலியெலா நீங்கிப் போகும்
பண்டிதை ரசத்திற் குக்கால் பணவெடை தாக்கி னாக்கால்
உண்டது கொண்டு போமே யுறுதியாம் வாய்நீ ராலே 94,

வாயினி லுமிழ் நீராலே மத்தித்தே யுருட்டி மெள்ள
காயினி லுமியோட் டுள்ளே கரியினி லுருக்கிக் கொண்டு
வாயினி லாயி பாதந் தன்னையே வணங்கி நித்தங்
காயினிலிதனைக் கொண்டே யாடலாங் கோடி காணே. 95.

கோடியென் றுரைத்தேன் கேளாய் கோடியு மிதற்குள்
ளாகும்
வாடியே மயங்க வேண்டாம் வைத்திடு துருசுச் சுண்ணம்
தேடினாற் கிடையாதப்பா தெருவெல்லாங் கிடைக்குமோ
சொல்
பாடியும் படித்து மென்ன பாரினி னூற்கிட்டாதே. 96.

கிட்டாமற் போனதெதோ கிடைத்தவர் கொடுக்க
மாட்டார்
நட்டாகத் தந்த பேர்கள் நரகினில் விழுந்து போவார்
செட்டாக விருக்கலாகா திரவியஞ் செய்வ தென்ன
முட்டாளாய்ப் போகாமற்றான் முறையதாய்க் குருவை
வாங்கே 97.

**பொழிப்புரை :-**

வங்கத்தோடு எடைக்கு எடை சூதம் சேர்த்து, அந்த எடைக்கு வெடியுப்பும் கூட்டி திராவகத்தில் ஊறவைத்து வட்டாக்கி உலர்த்தி ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலை செய்து குக்குடப்புடம் போடப்பறபமாகும். பக்குவம் தவறிப்போனால் முறைப்படி உப்பைக் கூட்டி அரைத்து முன்போல் மீண்டும் புடமிடச் சுண்ணமாகும். இப்பறபத்தை வாய் நீர்விட்டு (புகை நீர், திராவகம், உமிழ்நீர்) துருசுக்கட்டி அப்பி சூரியபுடம் மூன்று நாள் போட்டுப் பின்னர் காடைப்புடம் போட வெண்மையாகும். இச்சுண்ணத்தைக் கண்களால் கண்டாலே கலியெல்லாம் நீங்கிப் போகும். ரசத்திற்குப் பண எடை ஊட்ட உண்டுவிடும். வாயின் உமிழ் நீரால் மத்தித்து உருட்டி உமியோட்டுள்ளே கரியிட்டு உருக்கிக்கொண்டு முறைப்படி கொண்டால் சகல சித்தும் கூடும். இது அனைவருக்கும் கூடுவதன்று. ஆதலின் கிட்டினால் சொல்ல மாட்டார். சொன்னால் நரகம் எய்துவர். ஆதலின் முறைப்படி குருவைப் போற்றிக் காப்பாயாக.

## பொன்னிமிளை பற்பம்

வாங்குபொன் னிமிளை பற்பம் வளமதாய்ச் சொல்லக்கேளு
தாங்கிய வரசின் பட்டை தூளதா யிடித்துக் கொண்டு
காங்கிசை கீழ்மே லிட்டுக் கட்டியை நடுவே தூக்கி
ஓங்கியே யோட்டில் வைத்தே யதன்மேலே யோடு மூடே
98.

மூடியே சீலை செய்து முக்கியமாய்க் கெசபுடத்தில்
சாடியே நீறிப் போகுந் தவளம்போல் வெண்மையாகும்
கூடிய வாய்வு ரோகங் குலை குலைந் தோடிப் போகும்
நீடிய குன்ம மெட்டு நிலைகுலைந் தேகுங் காணே. 99.

காணவே சூலைக் கட்டு கண்டவிப் புருதி மாலை
ஊணரை யாப்புப் புத்துக் கோ கோ நெய் தேனிற் கொள்ளு
தோணவே தங்க நீறச் சுளுவாக வொன்று சொல்வேன்
நாணவே சூரிவித்தை நாவினி லுமிழ்நீ ராலே. 100.

## தங்க பற்பம்

நீரினா லரைத்துத் தங்கக் காசுமேல் பொருத்தி யோட்டில்
தாரியே வைத்து மூடிச் சந்துவாய்ச் சீலை செய்தே
ஊரினாற் கெச புடத்தில் உயர்த்தியாய் நீறிப் போகும்
பேரினா விந்த நீற்றைப் பேசொணா தறிந்த பேர்க்கே 101.

**பொழிப்புரை :-**

அரசின் பட்டையைத் தூளாக்கிப் பொன்னிமிளையின் கட்டியைக் கீழ்மேலிட்டு ஓட்டின்மேல் ஓடு மூடி, சீலை செய்து கெசபுடம் போட நீறிப் போகும். இப்பற்பத்தால் வாயு ரோகம், குன்மம், சூலை, கண்டவிப்புருதி, மாலை, அரையாப்பு, புற்று முதலியன பசுநெய், தேன் முதலிய அனுபானங்களால் கொள்ள நீங்கும். தங்கத்தைப் பற்பமாக்க எளிதாக ஒன்று சொல்வேன். நத்தைச் சூரியை நாவினிலுமிழ் நீரால் அரைத்து, தங்கக்காசு மேல் பொருத்தி ஓட்டுள் வைத்து சீலைசெய்து கெசபுடம் போட நீறிப்போகும். இதன் வலிமை அறிந்தவர்க்கே உணருதல் கூடும்.

## வேறு

போக்கென்ற வகையேது சொல்லக் கேளு
புத்திகெட்ட உலகுக்கு பொருளே காணும்
ஆக்கென்ற தங்கபற்ப மொரு மாவாக
அப்பனே ரவிமதியி லீய்ந்தாயானால்
ஊக்கென்ற விராகனுக்கே யதிகங்காணும்
வுறப்புள்ள தங்கமடா யிந்தப் போக்கு
நாக்கென்ற சரசுவதி நிர்த்தஞ் செய்வாள்
நாதாக்கள் செய்கின்ற வித்தை தானே 102.

**பொழிப்புரை :-**

இந்தப் பற்பத்தை ஒரு மாகளவாக (1/20) ரவிமதிக்கு (வெள்ளிக்கு) ஈய அராகன் அதிகங்காணும். இம்முறையால் நாதாக்கள் வித்தைகள் செய்வர்.

வித்தையென்ற வித்தையெல்லா மிருநூற்றுள்ளே
விருதுகட்டி வெட்டுதற்குச் சுளுவு மெத்த
சுத்தென்ற சுத்தெல்லாம் விட்டுப் போட்டுச்
சுளுவான வித்தைதனை யாடித் தேறு
பத்தென்ற நூறுமது முடிந்தவாறைப்
பாடினே னின்னமொரு நூறும் பாரு
முத்தென்ற முத்துப்போல் மூலிப்போக்கு
முக்கியமா யோதுகிறேன் முறையைப் பாரே. **103.**

**பொழிப்புரை :-**

இன்னம் ஒருநூறு பாடலில் முக்கியமான மூலிகையின் போக்குப் பற்றிக் கூறுகிறேன்.

முறையான ஏகமூ லிகையினாலே
முக்கியமா யெண்ணெயொடு நெய் கியாழந்
துறையான துறையெல்லா மிதற்குச் சொன்னேன்
சுளுவான தயிலங்கள் சூரணங்கள்
பறையென்ற பறைபோட்டேன் வியாதிக் கெல்லாம்
பண்பதுபோற் றுலக்கிவிட்டேன் பல நூலுள்ளே
நிறையான துறையெல்லாஞ் சுருக்கிச் சொன்னேன்
நிச்சயமாய் நூற்றுக்கு நிகர்காணேனே **104.**

**பொழிப்புரை :-**

எளிதான தயிலங்கள், சூரணங்கள் முதலியன நோய் நீக்கப் பல நூல்களில் கூறினேன். இந்த நூலுள் எண்ணெயோடு, நெய், கியாழம் பற்றிச் சுருக்கிக் கூறுவேன்.

## தைலக் காண்டம்

## மேகத்துக்குத் தயிலம்

நிகரில்லா மேகத்தின் தயிலங் கேளு
நிசமான சந்தமு மிலாமிச் சோடு
வகையாக வாவிரையின் பட்டை தானும்
வளமாகப் பலம்பத்து நிறுத்துத் தூக்கிப்
புகையாமல் தூணி நீ ரெட்டொன்றாக்கிப்
புகழுற்ற கியாழத்தை யிறுத்துக் கொண்டு
நகையாம லெள்ளெண்ணெய் நாழிவிட்டு
நரிகிண்டி வேர்ப்பலந்தா னரைத்துப் போடே 105.

போட்டதனைக் காய்ச்சியே மெழுகதானாற்
புண்ணியனே வடித்திட்டுப் புகலக் கேளு
நாட்டினிலே முழுகிவர மேகந்தீரும்
நளினமாந் தேகமுமே யிறுகிப் போகும்
பூட்டென்ற மேகநீர்ப் போக வேண்டிப்
புனிதமா மருந்தொன்று சொல்வேன்மைந்தா
சாட்டதனை முன்சொன்ன பற்பந் தன்னிற்
சார்பாகக் கொடுத்துவிடு சாந்தமாமே 106.

**பொழிப்புரை :-**

சந்தனம், விலாமிச்சு, ஆவாரம்பட்டை முதலியன தனித் தனியே பத்துபலம் எடுத்து நீரிலிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி, அதைப்பின் இறுத்துக் கொண்டு நல்லெண்ணெய் நாழி இட்டு நரிகிண்டி வேர்ப்பலம் அரைத்துப்போட்டு மெழுகுபதம் வர வடித்துக் கொண்டு, தலைமுழ்கிவர மேகம் தீரும். தேகம் இறுகிப் போகும்.

மேகநீர் அகலும் வண்ணம் இன்னமும் ஒரு மருந்து சொல்லுகிறேன்.

## வில்வவேர் தயிலம்

சாந்தமாம் வில்வவேர்த் தயிலங் கேளு
தானான வில்வவேர் பலந்தான் பத்து
பாந்தமா யிடித்ததனைப் பதக்கு நீரிற்
பருவமாய்க் காய்ச்சியே யெட்டொன்றாக்கிப்
போந்தெண்ணெய் நாழியிலே பலந்தான்
புகழாகக் கியாழத்தி லரைத்துப் போட்டுச்
சேர்ந்ததோர் தயிலமது மெழுகதானாற்
சிறப்பாக முழுகிவர வளமை கேளே. 107.

வளமையுடன் முழுகிவரப் பித்தம் போகும்
வரிசைபெற்ற மெய்யிலுள்ள உஷ்ணமேகும்
இளமைபெற வாக்கிவைக்கு மேகம் போகும்
இருகண்ணுந் தெளிவுதரு மிருமல் தீரும்
உறமதனிற் பித்தமில்லா மோடிப் போகும்
உள்வரட்சி யுட்சுரங்க ளொழிந்து போகுந்
தளமாகச் சூட்சமாந் தயிலஞ் சொன்னேன்
தளராமற் பாருநீ தரணி யோர்க்கே. 108.

**பொழிப்புரை :-**

வில்வவேர் பத்துபலம் எடுத்து அடித்துப் பதக்கு நீரிட்டுக் காய்ச்சி எட்டொன்றாக்கி, நாழி எண்ணெயில் ஒரு பலம் சந்தனத்தை அரைத்துப் போட்டு கியாழத்திலிட்டு மெழுகு பதமாக்கித் தலை மூழ்கிவரப் பித்தம், உடம்பிலுள்ள உஷ்ண மேகம், மேக ரோகம் முதலியன அகலும். இருகண்ணும் ஒளி பெறும். இருமல் தீரும். உள்வரட்சி, உள் சுரங்கள் ஒழிந்து போகும். இதனை முறையறிந்து செய்வாயாக.

## வேங்கைத் தயிலம்

தரணியுள்ள மானிடர்கள் பிழைக்க வேண்டிச்
சாற்றுகிறேன் வேங்கையுடத் தயிலந் தன்னைக்
கரணியமாய்ப் பலம்பத்துத் தூக்கிக் கொண்டு
காய்ச்சிவிடு தூணிநீ ரெட்டொன்றாகத்
திரணியுள்ள கியாழத்தை வடித்து வாங்கித்
திறமாக விலாமிச்சுப் பலமொன்றாக
வரணியமாய்க் குடிநீரி லரைத்துப் போட
வளமாக மெழுகுபத மானவாறே 109.

வாறாக முழுகிவர முறையைக் கேளு
வாதமொடு சூலைகளு மாண்டு போகும்
பேறாகப் பித்தமெல்லா நடுங்கி யோடும்
பீனிசமு மண்டையிடி பிரட்டற் சத்தி
வீறான விக்கல் முத லுடனே யேகும்
மெய்யெல்லாங் காந்தியுண்டாம் விழிரோகம்போம்
நூறாகும் பின்சொன்ன தயிலப் போக்கு
நுணுக்கமாம் பற்பத்தின் போக்குநூறே 110.

**பொழிப்புரை :-**

வேங்கை மரத்தின் வேர் பத்துபலம் எடுத்து தூணி நீரிலிட்டு எட்டொன்றாய்க்கியாழமாக்கி விலாமிச்சு ஒருபலம் எடுத்துக் குடிநீரில் அரைத்துப் போட்டு மெழுகுபதமாக்கி தினமும் மூழ்கி வர வாதம், சூலை, பித்தம், பீனிசம், மண்டை இடி, விக்கல் முதலியன அகன்று தேகம் ஒளிபெறும். விழிரோகம் அகலும்.

# வெட்டி வேர்த் தயிலம்

போக்கான சேதியொன்று சொல்லக் கேளு
புகழான வெட்டிவேர் பலந்தான் பத்து
நோக்காக யிடித்ததனைப் பதக்கு நீரில்
நுணுக்கமாய்க் காய்ச்சியே யெட்டொன்றாக்கி
வாக்காக வடித்ததனி லெண்ணெய் நாழி
வளமையா யதிமதுரம் பலந்தானொன்று
தாக்கான வெண்ணெய்க்கு ளரைத்துப் போட்டுச்
சாதகமாய் மெழுகுபதந் தன்னில் வாங்கே 111.

வாங்கியே முழுகிவர வரிசை கேளு
மானிலத்தில் மனிதர்கட்கு மண்டைச் சூலை
ஓங்கியே குட்டமொடு பிறநீர்க் கோர்வை
யொளிமருளுங் கண்புகைச்சற் காது மந்தம்
ஏங்கியே யுளைப்பிளைப்பு மேற்கால் நோயு
மியல் கெட்ட தாதுசய மெரித்தற் காந்தல்
நீங்கியே போவதற்கோர் மண்டலந்தான்
நேராக ஒன்றைவிட் டொருநாளென்னே. 112.

**பொழிப்புரை :-**

வெட்டிவேர் பத்துபலம் எடுத்து பதக்கு நீரிலிட்டு எட்டொன்றாய்க்கியாழமாக்கி எண்ணெய் நாழிவிட்டு, அதிமதுரம் ஒருபலம் வெண்ணெய்க்குள் அரைத்துப் போட்டு மெழுகு பதமாக்கி ஒரு மண்டலம் மூழ்கிவர மண்டைச்சூலை, குட்டம், பிற நீர்க்கோவை, கண் புகைச்சல், காதுமந்தம், இளைப்பு, கால்நோவு, தாது கெடுதல் முதலிய நோய்கள் அகலும்.

## வேம்பின் பட்டைத் தயிலம்

என்னவென்றே யின்னமொரு தயிலங் கேளா
யினிதான வேம்பினுட பட்டை வாங்கி
உன்னவென்று கால் துலா மிடித்துக் கொண்டே
யொருதூணி நீரதுதான் வார்த்துக் காய்ச்சி
சொன்ன தென்ன வெட்டொன்றா யிறுத்துபெள்ளச்
சுருதிபெற வெண்ணெயிரு நாழிவிட்டு
நன்னயமா மேலமது பலமிரண்டு
நலமான கியாழத்தி லரைத்துப் போடே 113.

அரைத்துடனே காய்ச்சிவிடு மெழுகதானா
லாற்றியே வடித்ததனை முழுகும் போது
நிரைத்திட்ட வாதமெல்லா மேங்கி யோடும்
நிசமான சூலையொடு குட்ட ரோகந்
திரைத்திட்ட நீரிழிவு நீர்க்கடுப்புச்
செங்கரப்பான் புண்புரைகள் சிதறிப்போகும்
உரைத்திட்ட தயிலத்தி லுறுதி மெத்த
உத்தமனே வேறொன்றை யுரைக்கிறேனே. 114.

**பொழிப்புரை :-**

வேம்பின் பட்டை கால்தோலா எடுத்து இடித்துக் கொண்டு தூணிநீர் வார்த்து எட்டொன்றாக்கி இறுத்துக் கொண்டு எண்ணெய் இரு நாழி சேர்த்து ஏலம் இரண்டு பலம் அரைத்துக் கியாழத்தில் அரைத்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சிப் பின் முழுக சகல வாதம், சூலை, குட்டரோகம், நீரிழிவு, நீர்க்கடுப்பு, செங்கரப்பான், புண்புரைகள் முதலியன அகலும்.

## குறுந்தொட்டித் தயிலம்

உரைக்கிறேன் குறுந்தொட்டி வேரைமைந்தா
வோர்நிறையாங் கால்துலா மிடித்துப் போட்டு
நிரைக்கிறேன் தூணிநீ ரெட்டொன்றாக்கி
நேராக யெண்ணெயிரு நாழிவிட்டு
கரைக்கிறேன் கியாழத்தா லரைத்து மைபோற்
கசகசா விருடலந்தான் கண்டுகொள்ளு
நரைக்கிறே னென்பதென்ற வாதமெல்லாம்
நடுநடுங்கி யோடுமடா நயந்து காணே. 115

**பொழிப்புரை :-**

குறுந்தொட்டி வேர் கால்துலாம் இடித்துத் தூணி நீரிலிட்டு எட்டொன்றாய்க் கியாழமாக்கி, நாழி எண்ணெயிட்டு, கசகசா இருபலம் மைபோலரைத்துச் சேர்த்து மூழ்கிவர சகல வாதமும் அகலும்.

## கொடுவேலி வேர்த் தயிலம்

நயமான கொடுவேலி பலந்தான்பத்து
நன்றாக இடித்திட்டுப் பதக்கு நீரில்
வயமாகச் சுவறக்காய்ந் தெட்டொன்றாக்கி
வளமான நல்லெண்ணெய் நாழிவிட்டு
நியமாகப் புன்னைக்காய் வெண்ணெய் போட்டு
நிலையான நற்சீரம் பலந்தா னொன்று
செயம் பெறவே யரைத்ததனைப் பாகிற் சேர்த்து
சீரான மெழுகுபத மானவாறே. 116.

ஆனதயி லம் வடித்து முழுகும் போது
ஆனந்த வாய்வினோ டனந்தம் வாய்வுந்
தேனமருங் குழலாய்கேள் வாசத்தோடு
சிறுசொரியுந் தினவுமுதற் சிரங்கு குட்டம்
போனதென்ன வரையாப்புக் கிரந்தி சூலை
புண்புரைக ளோடு பொடி பிளவை வீக்கம்
நானெனவே வந்தநோய் பலவுந்தீரும்
நல்லதொரு தயிலமிது நாடிப்பாரே. 117,

**பொழிப்புரை :-**

பத்து பலம் கொடிவேலி எடுத்து இடித்துப் பதக்கு நீரி விட்டு எட்டொன்றாய்க் கியாழமிட்டு, நல்லெண்ணெய் நாழி விட்டு புன்னைக்காயளவாக வெண்ணெய் போட்டு, நற் சீரகம் ஒரு பலம் சேர்த்து அரைத்து பாகில் சேர்த்து மெழுகு பதமாக்கி முழுகிவர சகலவாயும், சொரி, தினவு முதல் சிரங்கு, குஷ்டம், அரையாப்பு, கிரந்தி, சூலை, புண், புரைகள், பிளவை, வீக்கம் முதலியன அகலும்.

## சீரகத் தயிலம்

பாரப்பா சீரகந்தான் படியோ ரண்டு
　　பதமாக விடித்துநீர் பதக்கு வார்த்துச்
சீரப்பா வெட்டொன்றாய்க் கியாழம் வாங்கித்
　　தெளிவாக வெள்ளெண்ணெய் படிதான்வாரு
காருறையுங் கார்போகி பலமிரண்டு
　　கஷாயத்தா லரைத் ததனைக் கலக்கிச் சேர்த்தே
ஏறவே மெழுகுபத மாயிறக்கி
　　யியல்பாக முழுகிவரக் குணத்தைக் கேளே 118.

குணமென்ன குன்மமெட்டும் வாய்வுபத்துங்
　　குட்டமொடு தழுதனையுங் குண்டலமும் பின்னும்
மணமென்ன வாந்தி பித்தங் கிறுகிறுப்பு
　　வாய்வினால் வந்ததொரு சோகை பாண்டுங்
கணமென்ன உஷ்ணரோ கங்களும் போம்
　　கபாலத்திற் சூடுகப நீர்க்கட்டும்போம்
பணமென்ன நோய்தீரா மருந்து முண்டோ
　　பார்தனிலே முளைத்த மூலிகைக்குட் பாரே. 119.

**பொழிப்புரை :-**

சீரகம் இரண்டு படியை பதக்கு நீரிலிட்டு எட்டொன்றாய்க் கியாழமாக்கி எண்ணெய் ஒருபடி சேர்த்து, கார்போக அரிசி இரண்டு பலம் கியாழத்தில் அரைத்து அதனைக் கலந்து மெழுகு பதமாக இறக்கி மூழ்கிவர எட்டுவகைக் குன்மம், பத்துவகை வாயுத் தொல்லை, குட்டம், வாந்தி, பித்தம், கிறுகிறுப்பு, சோகை, பாண்டு, உஷ்ணரோகம், கபாலச்சூடு, கபம், நீர்க் கட்டு முதலியன அகலும்.

மூலிகைக்குள் வெகுமூலி சஞ்சீவியப்பா
முளைத்துதே மலைதோறுங் குவடுதோறுஞ்
சாலவே வெகுபூடு நாட்டிற் குள்ளே
சாதகத்தை யறியார்கள் சண்டிமாந்தர்
ஆலிக்கும் வைத்தியன் முன் குணத்தைக் காணான்
ஆண்மையினால் வயிறு பிழைக்க வலைவான் மட்டை
சோலியென்ன மனதுவைக்க வேண்டாஞ் சொன்னேன்
துறையான திரு நூற்றின் றுறையைப்பாரே. 120.

**பொழிப்புரை :-**

மூலிகைகளில் உயர்ந்த சஞ்சீவி மலைதோறும் குவடு தோறும் முளைத்துள்ளதும், பிற மூலிகைகளின் குணத்தையும் மக்கள் அறியார். வயிற்றுப் பிழைப்புக்காக பச்சிலை தேடி அலைவார்கள்.

## சூரிவித்துத் தயிலம்

நூற்றிலே யின்னமொரு தயிலங் கேளு
நுணுக்கமுள்ள சூரிவித்து துலாந்தான்காலே
ஏற்றியே யிடித்து நீர் பதக்கிற் கொட்டி
யெட்டொன்றா யொரு விறகால் வற்றக் காய்ச்சிப்
போற்றியே வடித்ததனி லெண்ணெய் நாழி
போதவிட்டுக் கற்கவகை சாற்றக் கேண்மின்
றோற்றியே யறுமாதக் காடி நாழி
சுக்கதிலே யொருபலந்தா னரைத்துச் சூட்டே. 121.

சூட்டியபின் பதமெழுகா யிறக்கிக் கொண்டு
தோன்றவே முழுகிவர மண்டலந்தான்
ஓட்டிவிடுங் கிரந்திகுட்டஞ் சூலை குன்ம
முண்டுவிடுங் கிராணியெல்லா முள் மூலத்தை
வாட்டிவிடுஞ் சூடுமுதல் வாங்கிப் போகும்
மைந்தனே மலக்கட்டு மயங்கி யேகுந்
தாட்டிகமாய்த் தீர்ந்துவிடுந் தயிலப் போக்குச்
சஞ்சீவி யொப்பென்னச் சாற்றினேனே. 122.

**பொழிப்புரை :-**

நத்தைச்சூரி வித்து கால் தோலா எடுத்து இடித்து நீர் பதக்குவிட்டு ஒரு விறகால் காய்ச்சி எட்டொன்றாக்கி வடித்து எண்ணெய் நாழியும், ஆறுமாதப்பழையதான காடி நாழியுடன் சுக்கு ஒருபலம் அரைத்துப் போடுவாயாக. மெழுகுபதமாய் இறக்கிக் கொண்டு ஒரு மண்டலம் மூழ்கிவரக் கிரந்தி, குட்டம், சூலை, குன்மம், உள்மூலம், சகலசூடு, மலக்கட்டு முதலியன அகன்றுவிடும்.

## கீழ்காய் நெல்லித் தயிலம்

சாற்றவகை யின்னங்கேள் கீழ்காய்நெல்லி
சமூலமாய் காற்றுலா மிடித்துக் கொண்டே
ஆற்றுநீ ரதுவிட்டுக் கியாழஞ் செய்தே
அப்பனே யெட்டொன்றாய்க் காய்ச்சி வாங்கி
மாற்றிடுவா யெள்ளெண்ணெய் படிதான் ரெண்டு
வளமான சர்க்கரையும் பலந்தா னோரைந்
தேற்றியே கர்க்கமிட்டு மெழுகதானா
லியல்பாக முழுகிவரத் தீருநோய் கேள். 123.

கேளடாபித்தமென்ற தெல்லாந் தீரும்
கிருகிருப்புத் தலைசுற்றல் வாய்நீருறல்
நாளடா ரத்தபித்தம் வெறித்த பித்தம்
நலமான விளைப்பிரைப்புப் பித்தரோகஞ்
சூளடா மஞ்சள்நீ ரிரத்த மூத் ரஞ்
சூடுமுத லூட்டினங்கள் பலவும் போகும்
வேளடா மேலெரிவு கைகால் காந்தல்
வெளுத்தமயிர் கருப்பாகும் விதத்தைப்பாரே 124.

**பொழிப்புரை :-**

கீழாநெல்லி சமூலம் கால்தோலா எடுத்து இடித்துக் கொண்டு ஆற்றுநீர் விட்டு எட்டொன்றாய்க்கியாழம் செய்து எண்ணெய் இரண்டு படியுடன் சர்க்கரை ஐந்துபலம் சேர்த்து மெழுகு பதமாக்கி மூழ்கிவர சகலபித்தம், கிறுகிறுப்பு, தலை சுற்றல், இளைப்பு, இரைப்பு, வாய் நீரூரல், ரத்தமூத்திரம், சூடு, மேலெரிவு, கைகால் காந்தல் முதலியன அகலும். வெளுத்த மயிர் கருமையாகும்.

## சங்கம் வேர்த் தயிலம்

விதமான சங்கினுட தயில மூலம்
வெட்டிவந்து காற்றுலா மிடித்துப் போட்டுப்
பதமாகத் தூணிசல மெட்டொன்றாக்கி
பாரதிலே யெள்ளெண்ணெய் படிரண் டிட்டே
அதமாகு மிளகுபல மரைத்துச் சேர்த்தே
அப்பனே மெழுகுபத மானவாறு
சுதமாக வடித்ததனை முழுகும்போது
சொல்வதென்ன குட்டமொடு சொறிசிரங்கே. 125.

சிரங்குடனே கிரந்திபத்துஞ் சூலைரோகஞ்
செங்கரப்பான் வண்டுகடி சில்விஷயங்கள்
குரங்குபோ விழுக்கின்ற வலிசயங்கள்
குற்றிருமல் வாதசலங் குடிபோமென்று
வரங்கொடுக்குஞ் சிவனுரைத்த வார்த்தை கேட்டு
மாயிசொல்ல யானறிந்து வாழ்த்தினேன் கான்
அறங்கதுவா யின்னமொரு தயிலங்கேளாய்
அமுக்கிரா பலம்பத்து வாகாய் வாங்கே. 126.

**பொழிப்புரை :-**

சங்கம் வேரை இடித்துப் பதக்கு நீரில் இட்டு எட்டொன் றாய்க்காய்ச்சி எண்ணெய் இரண்டு படியுடன், ஒருபலம் மிள கரைத்துச் சேர்த்து மெழுகு பதமாக்கி மூழ்கிவரக் குட்டம், சொறி, சிரங்கு, பத்துவகைக் கிரந்தி, சூலைரோகம், செங்கரப் பான், வண்டுக்கடி, சில்விஷங்கள், பல்வகை வலிப்புகள், சயம், குத்திருமல் முதலியன விரைந்து அகலும். சிவன் சக்திக்குச் சொல்ல சக்தி எனக்குரைத்தது. இன்னமொரு தயிலம் பற்றிக் கூறுகிறேன் கேட்பாயாக. அமுக்குரா பத்துபலம் வாங்கு வாயாக.

## அமுக்கிராத் தயிலம்

வாங்கியே யிடித்ததனைப் பதக்கு நீராய்
வடித்துக்கொண்டெண்ணெய்படி யதனிற் சேர்த்தே
ஓங்கியே எலுமிச்சஞ் சாறுநாழி
யொக்கவிட்டு மெழுகுபத மாகப்பார்த்துத்

தேங்கியே வடித்தெடுத்து வைத்துக் கொண்டு
திறமரக முழுகிவரச் சுருக்கைச் சொல்வேன்
பங்கியே பீனிசங்க ளெல்லாம் போகும்
பாரிலுள்ள மண்டையிடி பறந்துபோமே. 127.

**பொழிப்புரை :-**

அதனை இடித்து பதக்குநீராய் வடித்துக் கொண்டு எண்ணெய் படி அதனில் சேர்த்து எலுமிச்சம் சாறுநாழி விட்டு மெழுகு பதமாய்ப் பார்த்து வடித்து மூழ்கிவர பீனிசங்கள், மண்டை இடி முதலியன அகலும்.

## இஞ்சித் தயிலம்

பறப்பதற்குப் பின்னுமொரு தயிலங் கேளு
பச்சையிஞ்சி காற்றுலாம் பரிந்திடித்து
சிறப்புடனே பிழிந்துவடி கட்டிக் கொண்டு
தெளிவுடனே யெண்ணெயதிற் படிதான்விட்டே
உறப்புடனே பசுவின்பால் படியே யாகும்
உறுதியா மெழுகுபத மாகவாங்கிச்
சிறப்புடனே முழுகிவரப் பருவமாகத்
திடம்பெறவே தீருநோய் நிகழ்த்துறேனே. 128.

நிகழ்த்துகிறேன் மண்டையிடி சூலைவாதம்
நிலைகெட்ட பீனிசங்க ளிரைப்பிளைப்பு
புகழ்த்துகிறேன் சூலையொடு வாதவாய்வு
பொல்லாத கால்கடுப்பு நெஞ்செரிப்பு
மகத்திலே மெய்நோவதெல்லா நீங்கும்
மாளுமடா குட்டங்க ளனந்தங் கேளு
செகத்திலே நாடாம லோடிப்போகுஞ்
செம்முள்ளி யெண்ணெய்தனைச் செப்புவேனே 129.

**பொழிப்புரை :-**

பச்சை இஞ்சியை இடித்துச் சாறு பிழிந்து அத்துடன் ஒருபடி எண்ணெய்விட்டு பசுவின்பால் ஒருபடி சேர்த்து மெழுகு பதமாக்கி மூழ்கிவர மண்டை இடி, சூலை, வாதம், பீனிசங்கள் இரைப்பு, இளைப்பு, கால்கடுப்பு, நெஞ்செரிப்பு, உடல்வலி, குட்டம் முதலியன அகலும்.

## செம்முள்ளித் தயிலம்

செப்புவேன் செம்முள்ளி பலநூறப்பா
சிறக்கவே சமூலமா யிடித்துப் போட்டே
ஒப்புவேன் தூணிநீ ரதிலேயூற்றி
உறுதியா யெட்டொன்றா யிறக்கிக் கொண்டே
அப்புவே னதைவடித்து நாழியெண்ணெய்
அகம்விட்டுக் காய்ச்சிப்பத மானபோது
நப்புவேன் முழுகிவருங் காலந் தன்னில்
நன்றாகத் தீருநோய் நவிலக் கேளே. 130.

நவிலக்கேள் சயமீளை சயரோகங்கள்
நாடாது மந்தார காசந்தானும்
கவிலக்கேள் வாதமெல்லாங் காணாதோடுங்
கண்ணினீர்ப் பாய்ச்சலொடு குறைநோயெல்லாம்
அவிலக்கேள் புண்புரைக ளனைத்துந்தீரும்
அரையாப்புக் கிரந்திமுத லண்டவாதம்
உவிலக்கேள் வீக்கமொடு விடப்பாகந்தான்
ஓடுமடா வித்தயிலம் முழுகும் போதே. 131.

**பொழிப்புரை :-**

செம்முள்ளி நூறுபலம் சமூலமாய் எடுத்து இடித்துத் தூணிநீரில் இட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து நாழி எண்ணெய் விட்டுபதமாய் இறக்கி மூழ்கிவர ஈளை, சயரோகம், வாதம், கண்ணீர்ப் பாய்ச்சல், புண், புரைகள், அரையாப்பு, கிரந்தி, கண்டவாதம் முதலியன அனைத்தும் அகலும்.

## சாரணைத் தயிலம்

முழுகவே யின்னமொரு தயிலங் கேளு
முக்கியமாய்ச் சாரணைவேர் பலந்தான்பத்துத்
தழுகவே யிடித்ததனைப் பதக்கு நீரிற்
றாக்கியே யெட்டொன்றாய்க் காய்ச்சியெண்ணெ
யொழுகவே யொருநாழி யொக்கச் சேர்த்தே
யுத்தமனே மெழுகுபத மாயிறக்கிச்
செழியவே முழுகிவரும் போதுமைந்தா
சிதறிப்போம் வாதத்தால் வந்த கூறே. 132.

**பொழிப்புரை :-**

சாரணைவேர் பத்துபலம் இடித்துப் பதக்கு நீரில் இட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி எண்ணெய் ஒருநாழி சேர்த்து மெழுகு பதமாக்கி மூழ்கிவர சகலவாத நோய்களும் அகலும்.

## இருவேலித் தயிலம்

கூறாக விருவேலி பல நூறப்பா
　　கொத்தாக நிறுத்திடித்துத் துணிநீரிற்
பேறாக விட்டவித்தே யெட்டொன்றாக்கிப்
　　பேணியே யெண்ணெயதி னாழிவார்த்து
வீறாகக் கொதித்துவற்றி மெழுக தானால்
　　மெய்யெங்கும் பூசிமெள்ள முழுகும்போது
தேறாத உஷ்ணங்கள் கிறுகிறுப்புச்
　　சேட்மபித்தங் கண்புகை மண்டலத்திலாமே. 133.

**பொழிப்புரை :-**

இருவேலி நூறுபலம் எடுத்து இடித்துத் துணிநீரிலிட்டு எட்டொன்றாக்கி அதில் எண்ணெய் நாழிவார்த்து மெழுகுபதமாக்கி முழுகும்போது உஷ்ணங்கள், கிறுகிறுப்பு, சேட்மபித்தம், கண் தொல்லை முதலியன அகலும்.

## அகிற்கட்டைத் தயிலம்

ஆமின்ன மகிற்கட்டை பலமோ கேளாய்
　　ஐம்பதுதான் தூக்கியதைத் தூளாய்ப்பண்ணித்
தாமேநீர் தூணியிலிட் டெட்டொன்றாக்கித்
　　தப்பாம லெண்ணெயதி ஞழி சேர்த்துப்
போமின்ன மெழுகுபத மானவாறு
　　புகழாக வடித்துநீ முழுகினாக்கால்
வேமின்ன நீர்த்தோட முடனேயம்மா
　　மேகங்க ளுருமென்று விளம்பினோமே 134.

**பொழிப்புரை :-**

அகில்கட்டை ஐம்பதுபலம் எடுத்து தூளாக்கி தூணி நீரில் இட்டு எட்டொன்றாக்கி அதில் எண்ணெய் நாழிசேர்த்து மெழுகு பதமாக்கி மூழ்கிவர நீர்த்தோஷம், மேகநோய் உடன் அகலும்.

## அறுகம் வேர்த் தயிலம்

விளம்புவே னறுகம்வேர் பலந்தா னூறு
மேலிலுள்ள பச்சையெல்லாந் தள்ளிப் போட்டுத்
தளம்பவே நன்றாக விடித்துக்கொண்டு
தண்ணீர்தா னூறுபடி யதிலே வார்த்துக்
குளம்பாகக் காய்ச்சிடுவா யெட்டொன்றாக
குறிகண்டு வடித்தெண்ணெய் நாழி சேர்த்து
வளம்பெறவே மெழுகுபத மானவாறு
வாங்கியே பருவமாய் முழுகுவாயே. 135.

முழுகியே வரும்போது குணத்தைக் கேளு
மூலத்துட் சூடுடனே கபாலச் சூடு
தழுவியே பித்தமெல்லாந் தலைகெட்டோடுந்
தன்னுக்குள் வாதமெல்லாந் தவறுண்டேபோம்
அழுகியே வருங்கிரந்தி சூலை நீர்க
ளானதொரு வயிறெரிவு நெஞ்சி னோவு
கொழுவியதோர் நீர்க்கடுப்பு மேல்வரட்சி
கோபித்த வக்கினியுங் குளிர்ந்து போமே. 136.

**பொழிப்புரை :-**

அறுகம் வேர் மட்டும் நூறுபலம் எடுத்து நன்றாக இடித்து, நூறுபடி தண்ணீர் வார்த்து எட்டொன்றாக்கி எண்ணெய் நாழி சேர்த்து மெழுகு பதமாக்கி முழுகிவர மூலச்சூடு, கபாலச்சூடு, பித்தம், வாதம், கிரந்தி, சூலை, வயிறெரிவு, நெஞ்சின் நோவு, நீர்க்கடுப்பு முதலியன அகலும்.

## கொடுப்பைத் தயிலம்

குளிரவின்னம் வகையொன்று சொல்லக் கேளு
கொடுப்பையினீர் படியெண்ணெய் சரியேயாகும்
தளிரான கோஷ்டமதிற் பலந்தா னொன்று
தன்மை யுள்ள பசுவின்பால் விட்டேயாட்டி
எளிதாகக் கரைத்துவிட்டு மெழுகதானால்
யிறக்கிமெல்ல வடித்துக்கொண் டெழிலாய் நாளும்
நளினமாய் முழுகிவர மண்டலத்தில்
நலமாகத் தீருநோய் நவிலக்கேளே. 137.

கேளப்பா பித்தமெல்லாங் கெடிகெட்டோடுங்
　　கிறுகிறுப்பு மண்டையிடி சன்னிதாகம்
பாளப்பா உஷ்ணங்க ளுட்சுரங்கள்
　　படுபாவி மேலெரிவு கைகாற்காந்தல்
தேளப்பா கண்ணெரிவு சிரசு சூடு
　　திரேகவலி யெரிகுன்மந் தீர்ந்துபின்னும்
வாளப்பா கண்ணுக்குத் தெளிவுண்டாகும்
　　மகத்தான தயிலமிது மருவிச் செய்யே. 138.

**பொழிப்புரை :-**

கொடுப்பைநீர் ஒருபடி, எண்ணெய் ஒருபடி இவற்றுடன் பசுவின்பால் விட்டு ஆட்டிய கோஷ்டம் ஒருபலம் அரைத்து மெழுகுபதத்திறக்கி முழுகிவரப் பித்தம், கிறுகிறுப்பு, மண்டையிடி, சன்னிதாகம், உட்சுரம், மேலெரிவு, கைகால்காந்தல், கண்ணெரிவு, சிரசுசூடு, தேகவலி, எரிகுன்மம் முதலியன நீங்கும். கண்ணுக்குத் தெளிவுண்டாகும்.

## கையாந்தகரைத் தயிலம்

செய்யவே யின்னமொரு சேதிகேளு
　　செகத்திலுள்ள கய்யான்சாறு படிதானொன்று
வெப்பவே குமரிச்சாறு படிதானொன்று
　　விளம்புவே னெல்லிக்காய்ச் சாறதொன்றே
உய்யவே மூன்றுமது வொக்கச் சேர்த்தே
　　யுறுதிபெற வெள்ளெண்ணெய் படிதானாகு
மெய்யாகச் சாதிக்காய் பலமவ்வீதம்
　　விருதாக வேயரைத்துக் கலந்து போடே. 139.

போட்டிவற்றை மெழுகுபத மாகப்பார்த்து
　　புகழ்பெறவே வடிகொண்டு முழுகும்போது
தாட்டிகமாய்க் கண்ணோவு தலைநோவோடு
　　சளமான செவிநோவுஞ் சார்பித்தத்தை
ஓட்டிவிடும் உஷ்ணங்கள் பீனிசங்க
　　ளோடிப்போ மென்றுமுனி யுரைத்தவாறு
நாட்டிலுள்ளோர்க் கின்னமொரு தயிலங்கேளு
　　நலமான சவரிபல நூறுவாங்கே. 140.

## சவரித் தயிலம்

பலம்நூறு தாணிடித்துத் தூணிநீரிற்
 பைங்கிளியே யெட்டொன்றாய் வற்றக் காய்ச்சி
சலயதனை யிறக்கிக்கொண்டெண்ணெய் நாழி
 தயங்காம லிட்டொன்றாய்க் கூட்டிச் சேர்த்து
நலமாகக் கருஞ்சீரம் பலந்தானொன்று
 நாடியரைத் ததிற்போட்டுக் கரைத்திட்டேதான்
பிலமான மெழுகுபத மாகும்போது
 பிசகாமல் வடித்தெடுத்து முழுகுவாயே. 141.

வாய்ப்பான வாதமொடு குட்டமெங்கே
 வாதத்தா லெழுந்ததொரு கரப்பானெங்கே
காய்ப்பான காய்ப்பேது கழலையேது
 கண்டத்தில் வீக்கமுதல் வாடிப்போகும்
நோய்ப்பான நோயெல்லா மகன்றுபோக
 நுணுக்கமாய்த் தயிலமொன்று நுவலக்கேளு
சாய்ப்பான செந்நாவற் பட்டைத் தூளுஞ்
 சாங்கமாய்ப் பலம்நூறு தாக்கிடாயே. 142.

**பொழிப்புரை :-**

கையாந்தகரைச்சாறு, குமரிச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு மூன்றும் தனித்தனியே ஒருபடி எடுத்துச் சேர்த்து எண்ணெய் ஒருபடியுடன், சாதிக்காய் ஒருபலம் அரைத்துக் கலந்து மெழுகு பதமாய் இறக்கி முழுகிவர கண்ணோவு, தலைநோவு, செவி நோவு, சகல உஷ்ண நோவு, பீனிசங்கள் ஓடிப்போம். நூறுபலம் சவரியை இடித்துத் தூணி நீரிலிட்டு எட்டொன்றாக்கி, எண்ணெய் நாழியை எட்டொன்றாக்கிக் கூட்டிச் கருஞ்சீரம் பலம் அரைத்து அதில் போட்டுக் கரைத்து மெழுகுபதமாகும்போது எடுத்து மூழ்க, வாதமொடு குஷ்டம், வாதக்கரப்பான், கண்ட வீக்கம், உடல்நோவு முதலியன அகலும்.

## செந்நாவற்பட்டைத் தயிலம்

தாக்கியே யிடித்ததனைத் தூணி நீரிற்
 றயங்காமற் போட்டுபத மெட்டொன்றாக்கி
நோக்கியே பால்நாழி யுடனே மைந்தா
 நுணுக்கமாய் வேப்பெண்ணெய் படிதானொன்றே

ஆக்கியே வசம்பதுவும் பலமே தூக்கி
அரைத்துநீ கரைத்துவிட்டு மெழுகதானால்
தூக்கியே வடித்துமெள்ள முழுகினாக்கால்
துடியான வாதமொடு பித்தம் போமே. 143.

**பொழிப்புரை :-**

செந்நாவல் பட்டைத்தூள் நூறுபலம் எடுத்துத் தூணி நீரிலிட்டு எட்டொன்றாக்கி, பால் நாழியுடன் வேப்ப எண்ணெய் ஒருபடி சேர்த்து, ஒருபலம் வசம்பை அரைத்துக் கரைத்து மெழுகுபதமாய் இறக்கி மூழ்கிவர வாதமொடு பித்தம் அகலும்.

## அகிற்பட்டைத் தயிலம்

போகவே யின்னமொரு தயிலங்கேளு
புகழாக வகிற்பட்டைப் பலந்தானூறு
சாகவே யிடித்ததனைத் தூணிநீரில்
சாதகமாய்ப் போட்டவித்தே யெட்டொன்றாக்கி
வேகமா மெண்ணெயதி னாழிவிட்டு
வேப்பெண்ணெய் படுபாதி கூடச்சேரு
நாகவல்லிக் கொடிச்சாறு மொக்கவார்த்து
நலமாக மெழுகுபத மான போதே 144.

பதமாக முழுகிவரத் திருநோய் கேள்
படுபாவி வாதமெல்லாம் பறந்துபோகும்
இதம்படவே யின்னமொரு தயிலஞ் சொல்வேன்
யிடித்திடுவாய் திராப்பாசி பலந்தான் ரண்டு
சிதமான தூணிநீர் தன்னிற் போட்டுச்
சிறக்கவே யெட்டொன்றாய் வடித்துக் கொண்டு
சுதமாக ஏரண்டத் தெண்ணெய் நாழி
தூளாக்கி மஞ்சள்பலம் போட்டுக் கிண்டே 145.

கிண்டியே வடித்திடுவாய் மெழுகதாக
கெடிகலங்கி யோடிவிடும் வாதமெல்லாம்
பண்டிதருக் கிம்முறைகட் பாடமுண்டோ
பார்ப்பதற்கு வெகுசுளுவு பரிந்து பாரு
கண்டிதமாய்ச் சொல்லிவிட்டே நுணுக்கமெத்தக்
கதிகெட்ட நோய்களது தீரவென்றே
உண்டுகொண் டிருப்பதற்குச் சொர்ண முண்டோ
உறுதியிந்த நூன்முறையை யூணிப்பாரே. 146.

**பொழிப்புரை :-**

அகில்பட்டை நூறுபலம் எடுத்து இடித்து தூணிநீரிலிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி, நாழி எண்ணெய் விட்டு, வேப்ப எண்ணெய் அரைநாழி சேர்த்து நாகவல்லிக்கொடிச்சாறு (வெற்றிலை) சம அளவு சேர்த்துக்காய்ச்சி மெழுகுபதமாய் இறக்கி முழுகிவர சகலவித வாதமும் அகலும். திராப்பாசி இரண்டு பலம் தூணி நீரிலிட்டு எட்டொன்றாய்க்காய்ச்சி விளக் கெண்ணெய் நாழியோடு மஞ்சளைத் தூளாக்கிப்போட்டு மெழுகு பதமாக்கி மூழ்கிவர தீராத நோய்கள் பலவும் தீரும்.

ஊணியே யின்னமொரு சேதி கேளா
யுள்ளுக்குத் தயிலமொடு கிரதஞ் சொல்வேன்
காணவே காணிவேர் பலந்தானொன்று
கனமான வெட்டிவேர் விலாமிச்சம் வேர்
பூணியே யோரிதழ்வேர் சிறுகீரைத்தன்
புகழ்வேரும் வகைக்குவொரு பலமதாகப்
பாணியே பாலதுவார்த் தரைத்து நெய்தான்
படிரெண்டுக் குள்ளிட்டுக் காய்ச்சு காய்ச்சே. 147.

காய்ச்சியே யுட்கொள்ளக் கரண்டிவீதம்
கனரோகம் பதினெட்டுங் காணாதோடும்
மாச்சுதே யுட்சுரங்க ளகன்று போகு
மணுகாதி யுஷ்ணங்கள் மேகமின்னும்
போச்சுதே வரட்சியுட னுள்ளுள்ரோகம்
புண்ணான வக்கரங்கள் போகுஞ் சொன்னேன்
ஏச்சுதே யெண்ணாதே யிடுசாதிக்காய்
யினிதான வதிமதுர மாசிக்காயே 148.

காயொன்று வகைக்கியொரு கழஞ்சுவீதம்
கரைத்திடுவாய் பாலில்முன்போல் நெய்க்குள்ளேதான்
தாயென்றே யின்னுமொரு கிருதஞ் சொல்வேன்
சதாவேரிக் கிழங்கினுட சாறுநாழி
வாயென்ற திரிகடுகு திரிபலாதி
வகைவீதங் கழஞ்சொன்று நறுநெய்நாழி
யேயென்றே பெயரிட்டு மெழுகதானா
லிறக்கியே வடித்திடுவா யியல்பைக் கேளே. 149.

இயல்பாகக் கரண்டிநிறை யுண்ணுங்காலை
யெழுந்ததொரு கரப்பான்க ளெல்லாம் போகும்
முயலான நீர்விஷங்க ளனைத்துந் தீரும்
முறுக்கியெழும் வாய்வுடனே யிரைச்சலேகும்
செயலான பித்தமொடு சிலேற்பனங்கள்
செனித்ததொரு கிறுகிறுப்புச் செரியாமாந்த
மியலான கிருமிகளு மற்றுப் போகு
மேன்மையா யின்னமொரு கிரதங் கேளே. 150.

**பொழிப்புரை :-**

இனி உள்ளுக்குத் தயிலமொடு கிரதமும் சொல்லுகிறேன். பொன்னாங்கண்ணி வேர், வெட்டிவேர், விலாமிச்சைவேர், ஓரிதழ்த்தாமரைவேர், சிறுகீரைவேர் இவை வகைக்குப் பலம் எடுத்துக் கொண்டு பால்விட்டு அரைத்து இரண்டுபடி நெய்யிட்டுக் காய்ச்சி இறக்கி எடுத்துக் கொண்டு தினம் ஒரு (சிறு) கரண்டி அளவு உட்கொள்ள கனரோகம் பதினெட்டும் காணாது ஓடும். உட்சுரங்கள், மேகம், வரட்சியுடன் உள்ரோகம் முதலியவையும் அகலும். சாதிக்காய், அதிமதுரம், மாசிக்காய் இவை வகைக்கு ஒரு கழஞ்சு முன்போல் பாலில் அரைத்து நெய்யிட்டுக் காய்ச்சி இறக்கி எடுத்துக்கொண்டு உட்கொள்க.

சதாவேரிக்கிழங்கின் சாறு நாழி; திரிகடுகு, திரிபலா இவை வகைக்கு ஒரு கழஞ்சு; நெய் நாழி சேர்த்து எரித்து மெழுகு பதமாக்கி தினம் ஒரு கரண்டி உண்ண கரப்பான், நீர்விஷங்கள், வாயு, இரைச்சல், பித்தமொடு சிலேற்பனங்கள், கிறுகிறுப்பு, செரியா மாந்தம், குடற்கிருமி முதலியன அகலும்.

கிரதமாந் திரிகடுகு திரிபலாதி
கேளப்பா வகைவகைக்குப் பலந்தானொன்று
நிருதமாய்ச் சலம்பத்துப் படியிற்குள்ளே
நேராகப் போட்டுபத மெட்டொன்றாக்கி
விருதாவாய்ப் போகாமல் மெழுகதானால்
மேன்மையாய் வடித்ததனை வைத்துக் கொண்டு
சிறுகவே கரண்டிநிறை கொள்வாயானால்
தீருகிற வியாதியதைச் செப்பக் கேளே. 151.

செப்புவேன் சீரகமும் ஓமங்கூட்டிச்
சிதறாமற் சூரணித்துப் பதனம் பண்ணி
இப்புவியில் வெருகடிநெய் தேனிற்கொள்ள
வீரெட்டுக் கரப்பானுஞ் சிரங்கு குஷ்டம்
நப்புவேன் கிருமியுட னசீரணங்கள்
நாடாது கிரந்தி முதல் கிராணி மூலம்
எப்போதும் வாராது சொன்னேன் மைந்தா
யின்னுமொரு கிரதவகையியம்பக் கேளே. 152.

**பொழிப்புரை :-**

திரிகடுகு, திரிபாலா இவை வகைக்கு ஒருபலம் எடுத்துக் கொண்டு பத்துபடி நீரில் இட்டுக் கொதிக்கவைத்து எட்டொன்றாக்கி வடித்துக்கொண்டு, சீரகமும் ஓமமும் கூட்டிச் சூரணித்துச் சேர்த்து வெருகடியளவு நெய், தேன் இவற்றை அனுபானமாய்க் கொள்ளக் கரப்பான், சிரங்கு, குஷ்டம், அசீரணங்கள், கிரந்தி, கிராணி மூலம் முதலியன அகலும்.

இயம்பக் கேள் தூதுவளை பலமோபத்து
யியல்கண்டங் கத்தரியு மதுதான்வீதம்
தயவான துளசியுமவ் வெடையே சேரு
சாற்றியதோர் தோடையது மொப்பதாகும்
நயம்பெறவே பலம்பத்து விஷ்ணு காந்தி
நன்றான பிரமியதும் பலம்பத்தாகுஞ்
செயம்படவே யிடித்திவற்றைத் தூணிநீரிற்
றிட முடனே யெட்டொன்றா யெரித்திறுத்தே 153.

இறுத்திட்ட யெண்ணெயுட னெய்யுங் கூட்டி
யிதமுடனே திப்பிலியுஞ் சிற்றரத்தை
உறுத்திட்டே வகைக்கு அரைப் பலமாய்த்தூக்கி
யொளிமெ ழுகு போலரைத்துச் சேர்த்துக்கிண்டி
முறுத்திட்டுப் போகாமல் வடித்துக் கொண்டு
முக்கியமாய்க் கரண்டிநிறை யளவேயாக
ஒருத்திட்டங் கொண்டாக்கால் தீரும் நோய்கேள்
உற்றதோ ரிருமலெல்லா மோடிப்போமே. 154.

ஓடிப்போந் தேன்கூட்டிக் கொண்டாயானால்
உட்சுரங்க ளிரைப்பிளைப்புத் துரப்புக் கக்கல்
நாடாது வாய்வோடு கபக்கட்டெல்லாம்
நடுங்கியே பறக்குமடா நளினமாகுந்

தேடிப்போந் திரிகடு நெற் பொரிதன்னோடே
தேனிலே தின்றுவிடு கிரதஞ் சேர்த்து
வாடிப்போ மோகோகோ வகுத்த நோய்கள்
வன்மையா மென்றருளிச் செய்தவாறே. 155.

**பொழிப்புரை :-**

தூதுவேளை, கண்டங்கத்திரி, துளசி, ஆடாதோடை, விஷ்ணுகாந்தி, பிரமி இவை தனித்தனியே பத்துபலம் எடுத்து இடித்துச் சேர்த்து தூணி நீரில் கலந்து எட்டொன்றாக்கி, எண்ணெயும் நெய்யும் அளவாய்ச் சேர்த்து, திப்பிலி, சிற்றரத்தை வகைக்கு அரைபலம் எடுத்து மெழுகுபோல் அரைத்துச் சேர்த்து, கிண்டிப் பக்குவமாய் இறக்கிக் கரண்டி அளவாய்க் கொள்ள இருமல் எல்லாம் ஓடிப்போம். தேனை அனுபானமாகக் கொள்ள உட் சுரங்கள், இரைப்பு, இளைப்பு, துரப்புக்கக்கல், வாய்வு, கபக்கட்டு முதலியன அகலும்.

செய்தபடி சன்னிக்குத் தயிலமொன்று
செப்பக்கேள் வெள்ளுள்ளி வசம்பினோடே
உய்ததொரு நிலவேரு முசுறு முட்டை
யுறப்பான தண்டுடனே கோழி முட்டை
நெய்த முள்ள நெய்நாழி வேம்பிணெண்ணெய்
நிறையாகுஞ் சரக்குகளைப் பதமாய்த் தூக்கி
செய்தபே ராமணக் கெண்ணெய் நாழி
சிறப்பாக விட்டதிலே பொரித்துக் கொண்டே 156.

கொண்டுவிட வெண்ணெய்க்கு வகையைக் கேளு
கோலமுள்ள சுக்கிடித்துக் கிழிபோற் கட்டிச்
சுண்ட வைத்து தயிலத்திற் பதமாய்மைந்தா
சுகமாகக் குத்திவிட சன்னிவாதம்
மிண்டுசெய்யும் வலியைந்துஞ் சிதறிப்போகும்
மீளாத சன்னிதனக் குள்ளுக் கேற்றுப்
பண்டுள்ள நோயதுதான் தீருமென்று
பண்பாக வித்தயில மியம்பி னோமே. 157.

**பொழிப்புரை :-**

சன்னிக்கான தைலமொன்று கூறுகிறேன். வெள்ளுள்ளி, வசம்பு, பூநாகம், எறும்பு முட்டை, கோழி முட்டை முதலிய சரக்குகளை அளவாக எடுத்துக்கொண்டு நெய், வேப்ப

எண்ணெய் இவை இரண்டும் நாழி பேராமணக்கெண்ணெய் நாழி விட்டு பொரித்துக்கொண்டு, சுக்கு இடித்து கிழிகட்டி சுண்டவைத்துத் தைலபதமாய் இறக்கி வைத்துக்கொண்டு உட்கொள்ள சன்னிவாதம், முதலிய நோய்களும் ஐந்துவகை வலிகளும் அகன்றுபோகும்.

இயம்புகிறேன் நவச்சாரக் குழம்பு கேண்மின்
    எருக்கம்பா லுழக்குடனே கள்ளிப்பாலாற்
சுயமான சாரமது கழஞ்சு பத்தைச்
    சுகமாகத் தானரைத்து மெழுகதாக்கி
நயம்பெறவே யாமணக் கெண்ணெய் சேர்த்து
    நாணயமாய்ச் செப்பதனி லடைத்துக் கொண்டு
சயமான பெருவயிறு மகோதரங்கள்
    தன்னோடு நீராம்பல் விஷப்பாகந்தான் 158.

பாகமாய் மிளகுடனே குன்றிவித்து
    பகருகின்ற சுண்டைக்காய் வீதங்கொள்ளு
வேகமாய்க் கிருமிகளு மலபேதங்கள்
    விட்டுவிட வேணுமென்றால் வெந்நீர்கொள்ளு
நாகந்தன் விடம்போன்ற நீர்களெல்லாம்
    நாடாது ரவிகண்ட பனியைப்போலே
ஏகுமே யிம்மருந்து கொண்டாயானால்
    யேழுநாள் பால்கொள்ள வியல்பதாமே. 159.

**பொழிப்புரை :-**

நவச்சாரக்குழம்பு பற்றிச் சொல்லுகிறேன் கேட்பாயாக. எருக்கம்பால் கள்ளிப்பால் இவற்றால், பத்துகழஞ்சு சாரத்தை மெழுகுபதமாய் அரைத்து ஆமணக்கெண்ணெய் சேர்த்துச் செப்புப் பேழையில் வைத்துக்கொண்டு சுண்டைக்காய் அளவு உண்ணப் பெருவயிறு, மகோதரங்கள், நீராம்பல், சகலவிஷமும் அகலும். வெந்நீரில் கொள்ள கிருமிகளும் மலபேதங்களும் அகலும்.

தாமென்ற மேனிச்சூரணமே செய்து
    தாங்கரிய சீரகத்தூ ளொக்கச் சேர்த்து
நாமென்றே நாற்பதுநாள் கொள்வீரானால்
    நாடாது வாய்வெல்லா மனந்தந் தீரும்

சாமென்ற தீபனங்கள் மிகவுண்டாகும்
சணத்திலே மந்தமெல்லாந் தவறுண்டோடும்
வேமென்ற சில்விஷங்க ளெல்லாந் தீரும்
வேதாக் கினிக்குமரன் பொடியதாமே. 160.

**பொழிப்புரை :-**

குப்பைமேனியைச் சூரணம் செய்து சம அளவு சீரகத்தூள் சேர்த்து நாற்பது நாள் கொள்ளச் சகலவாயும் அகலும், பசி மிகவுண்டாகும், மந்தம் அகலும், சில் விஷங்களும் நீங்கும். இதன் பெயர் வேதாக்கினிக் குமரன் பொடியாகும்.

## சீரகச் சூரணம்

பொடியான பொடியொன்று சொல்லக் கேளு
புகழ்பெரிய சீரகமோ பலந்தா னொன்று
செடியான வோரிதழ்தன் சன்னமொன்று
சிவந்ததொரு சந்தனமும் பலந்தாளொன்று
மடியவே யிடித்துத்தூள் வைத்துக் கொண்டு
வளமாக நறுநெய்யிற் கழஞ்சியுண்ணு
துடியான உஷ்ணங்கள் ஊணில் ரோகஞ்
சுருக்குடனே நீர்க்கடுப்பு பிரமேகங்கள் 161.

மேகமுட னுட்காய்ச்ச லெரிவுகாந்தல்
மிகையாக வந்த குன்ம மெல்லாந் தீரும்
போகுமின்ன மெலும்புருக்கி தசையடைப்புப்
பொறுக்காத நீர்த்தாக மார்பி னோயும்
வேகமுறும் வாய்நாற்ற மேனாற்றங்கள்
விட்டோடிப் பறக்குமின்னம் விளம்பக்கேளு
கூகைநீர் கஞ்சாவுஞ் சாதிக்காயும்
கோகோவாய் விளங்கங் குரோ சாணியோடே 162.

## குரோசாணிச் சூரணம்

குரோசாணி யிவைபலமொவ் வொன்றேயாகும்
குணமாக வேவறுத்துச் சூரணித்து
நிராசாணி யாகியதோர் தூளில்மைந்தா
நேராகக் கருவேம்பின் பொடியைச் சேர்த்தே

யுராசாணி வாழைப்பூ வவித்துப் பிட்டா
யுறப்பிழிந்து சாற்றினிலே கொண்டாயானால்
முராசாணி யானதொரு கடுப்பிளைப்பு
மூலத்திற் சூடும்போ முழங்குவாயே. 163.

**பொழிப்புரை :-**

சீரகம், ஓரிதழ்த்தாமரை, சந்தனம் இவை மூன்றையும் பொடித்து நெய்யில் அளவாக உண்ண உஷ்ணங்கள், நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, பிரமேகங்கள், உட்காய்ச்சல், குன்மம், எலும்புருக்கி, தசையடைப்பு, நீர்த்தாகம், மார்புனோய், வாய்நாற்றம் முதலியன உடன் விலகும். கூவைக்கிழங்கு, கஞ்சா, சாதிக்காய், வாய்விளங்கம், குரோசாணி இவை வகைக்கு ஒருபலம் எடுத்துக் கொண்டு வறுத்துச் சூரணித்து அதனோடு கருவேம்பின் பொடியைக் கலந்து, வாழைப்பூவைப் பிட்டாய் அவித்துச் சாறு பிழிந்து அனுபானமாய்க் கொண்டால் கடுப்பு, இளைப்பு, மூலச்சூடு இவை அகலும்.

## கொடிவேலிச் சூரணம்

முழங்கவே வேறுவகை சொல்லக் கேளு
மூதண்டக் கொடிவேலி சூரணித்து
விழுங்கவே படியொன்று சீனிப்பாவு
வீறாக மேனித்தூ ளளவேபாகுங்
கழங்காமற் கார்போக அரிசியோடே
கருஞ்சீரம் நற்சீர மூன்று மைந்தா
புழுங்கவே வகைவகைக்குப் பலமொன்றாகப்
புனிதமாய்ப் பொடித்திட்டு புகழ்ந்து வைத்தே. 164.

வைத்திட்ட சூரணத்தைத் தேனிற்கொள்ள
வருஞ் சூலை கிரந்தி குட்டம் வாதவாய்வு
வெத்திட்ட வண்டுகடி புழுவெட்டோடு
விஷகடியு மெலிகடியும் விலகிப்போகும்
மெய்த்திட்ட மாகியதோ ரபான வாய்வு
விரைந்திறங்கு மூலத்திற் சூடும் நீங்குங்
கைத்திட்ட தொழிலதனைச் சொல்லிவிட்டேன்
கனமான மிளகுநீர்க் கியாழங்கொள்ளே. 165.

**பொழிப்புரை :-**

அருகு, கொடிவேலி இவற்றை சூரணித்து ஒருபடி பரங்கிச்சக்கை, அதே அளவு குப்பை மேனித்தூள் கலந்து கார் போக அரிசி, கருஞ்சீரகம், நற்சீரகம் இவை வகைக்குப் பலம் எடுத்துப் பொடித்து சேர்த்து, இச் சூரணத்தைத் தேனில் கொள்ள சூலை, கிரந்தி, குட்டம், வாதவாயு, வண்டுக்கடி, புழுவெட்டு, விஷக்கடி, மூலச்சூடு முதலியன அகலும். மிளகுக் கியாழத்தில் மண்டலம் கொள்ள பாண்டு தீரும்.

கொள்ளவே மண்டலத்திற் பாண்டுதீருங்
குணமாக வின்னமொரு முறையைக் கேளு
பிள்ளையில்லாப் பேர்களுக்கு மருந்துசொல்வேன்
பேயான தும்மட்டி வித்து வாளம்
உள்ளபடி குழித்தயிலம் சமனாய்வாங்கி
யுறுமஞ்சள் பொடியதுவோர் காசேதூக்கு
வள்ளலே தயிலமந் நிறையே சேர்த்து
மத்தித்துக் கொண்டுவிடக் கர்ப்பவாய்வே 166.

கெர்ப்பவாய் வோடவென்று வீணாய் மைந்தா
கிலேசிக்கத் தான்வேண்டாம் நோய்கள்தீரும்
செப்பமுடன் மருந்துண்ணில் வெந்நீர்கொள்ளு
திரும்பியே பேதித்தாற் கஞ்சி கொள்ளு
நப்பவே கொடுத்தநாள் முதலாய்த் தொட்டு
நன்றாக வொருபொழுதாய்க் கொண்டுவாநீ
அற்பமென்று நினையாதே யுறுதியாகும்
அதைத்தவிர பின்னையுமோ ரடவுகேளே. 167.

**பொழிப்புரை :-**

பிள்ளையில்லாதவர்களுக்கு மருந்து சொல்கிறேன். பேய்த் தும்மட்டிவித்து, நேர்வாளம், இவற்றிலிருந்து குழித்தைலம் சம அளவாய் இறக்கி மஞ்சள்பொடி ஒரு காசு அளவு சேர்த்துக் குழைத்து உட்கொள்ள கர்ப்பவாயு அகலும். மருந்து உட் கொண்டு வெந்நீர்கொள்ள வேண்டும். பேதியானால் கஞ்சியை உட்கொள்க. ஒருநாளைக்கொரு பொழுது கொள்ள வேண்டும்.

# கொம்பரக்குக் கிரதம்

அடவான கொம்பரக்குக் குந்தரிக்க
ஆனந்த சாதிக்காயபின் (கு)ராசாணி
திடமாகச் சூரணித்தே நல்லெண்ணெய்க்குள்
திரட்டியே கொண்டுவிடு சிறுபுன்னைக்காய்
குடலோடு பற்றியதோர் கிராணி மூலங்
குத்துகின்ற குறுக்குவலி மூலச் சூடு
கடல்போல வந்ததொரு கடுப்பெல்லாம் போங்
காதடைப்பும் புண்ணினுக்குங் கண்டவாறே. 168.

**பொழிப்புரை :-**

கொம்பரக்கு, குந்தரிக்கம், கடுக்காய், அபின், குரோசாணி இவற்றைச் சூரணம் செய்து நல்லெண்ணெயில் திரட்டி சிறு புன்னைக்காய் அளவு உட்கொள்ள குடலோடு பற்றிய கிராணி, மூலம், மூலச்சூடு, கடுப்பு முதலியன அகலும்.

கண்டதொரு சேதியுண்டு சொல்லக் கேளு
காதிலுள்ள வியாதியெல்லாங் கட்டாய்த்தீர
விண்டபடி பூநாக முசுறுமுட்டை
வேரிலுள்ள தண்டிறைச்சி வெள்ளையுள்ளி
கொண்டபடி கோழிமுட்டை வசம்பு குக்கில்
குணமாக வகைவகைக்கு கழஞ்சு கூட்டிப்
பண்டருளும் வேப்பெண்ணெய் தன்னிற்சேர்த்துப்
பதமாக வெரித்ததனைக் காதிற்பாய்ச்சே. 169.

பாய்ச்சியே யடைத்திடுவாய் பத்தாநாளிற்
பளிச்சென்று செவி கேட்குஞ் சீழ்பாய்ச்சற்போம்
ஆச்சுதே குத்துளைச்சற் பூச்சிசாகும்
அடைப்புவிடுங் காதிரைச்ச லகன்று போகும்
வாச்சுதே யின்னமொரு வரிசை கேளு
வாயிலுள்ள வியாதியெல்லா மகன்றுபோக
பாய்ச்சியே பாக்கதில்முன் தயிலம்பூசிப்
பச்சையாய்த் தின்றொதுக்கப் பற்குத்தும்போம். 170

**பொழிப்புரை :-**

பூநாகம், எறும்பின் முட்டை, வேரிலுள்ள தண்டின் உள்ளீடு(?), வெள்ளுருள்ளி, கோழி முட்டை. வசம்பு, குக்கில் இவை வகைக்குக் கழஞ்சு கூட்டி வேப்பெண்ணெயில் சேர்த்துப் பதமாக எரித்து அதனைக் காதில் பாய்ச்சுவாயாக. பத்துநாள் இவ்வாறு செய்ய செவிகேட்கும், சீழ்போகும், செவிக்குத்துபோம், செவிப் பூச்சி அகலும், அடைப்பு, காதிரைச்சல் முதலியன நீங்கும். வாயிலுள்ள பற்குத்து முதலிய நோயகல பாக்கதில் முன்தயிலம் பூசிப் பச்சையாய்த் தின்று ஒதுக்கவும்

குத்துவிடு முட்பிரண்டை வேர்க்கியாழங்
 கொப்பளிக்கப் பல்லரணை தந்த சூலை
அத்துப்போ மசைந்தாலு முறத்து நிற்கும்
 அழுக்கெல்லாந் தீர்ந்தகலு மதன்பின்கேளு
சித்தாகும் நாக்கில்வருஞ் சிங்கி ரோகம்
 தீரவொரு மருந்துசொல்வேன் சிவவேம்பின்வேர்
முத்தாகும் பல்விளக்கப் பத்தாநாளில்
 முறையான நோய்களெல்லா முழுதும் போமே. 171.

**பொழிப்புரை :-**

முட்பிரண்டை வேர்க்கியாழம் கொப்பளிக்கப் பல்லரணை, தந்த சூலை, பல்லசைவு, நாவில் வரும் பல்வகை நோய் இவை தீரும். சிவன்வேம்பின் வேரில்பல் விளக்க பல்நோய் அகலும்.

## வெள்வேல் வேர்த் தயிலம்

முழுதுமே போகவொரு மருந்துசொல்வேன்
 மூதண்ட வெள்வேலுங் குமிளும் வன்னி
பழுதில்லாக் குண்டலமாம் பாலையோடே
 பருத்ததோ ரெருக்கிலையு மரசு காரை
தொழுதோண்டிப் பட்டையிவை சமனாய்த்தூக்கி
 சுந்தரனே தூணிநீ ரதனிற்போட்டு
வழுவுபடா தெட்டொன்றாய்க் காய்ச்சிக்கொண்டு
 வளமான சம்பீரஞ் சாறு நாழி 172.

நாழியா மெள்ளெண்ணெ யளவாய் வார்த்து
நலமான துருசுவெள்ளைக் குந்திருக்கம்
வீழவே வகைவகைக்குக் கழஞ்சு வீதம்
மிரளாமற் பொடித்திட்டு வடித்ததோடே
கோழியி னுதிரம்விட்டுக் கொப்பளிக்க
குறட்டைகளில் கட்டுமுதல் குலைந்துபல்லின்
வாழியென்ற புண்கள் முதல் வீக்கமெல்லாம்
வாங்கிப்போம் வளமையுடன் வரிசைபாரே. 173.

**பொழிப்புரை :-**

பல் சம்பந்தமான நோய் முழுதும் நீங்க ஒருமருந்து சொல்கிறேன். கஞ்சா, வெள்வேல், குமிழ், வன்னி, சங்கு, பாலை, எருக்கிலை, அரசு, காரை தோண்டிப் பட்டை (?) இலை சம அளவு எடுத்துத் தூணிநீரில் போட்டுக் காய்ச்சி எட்டொன்றாக்கி, எலுமிச்சம் பழச்சாறு நாழி, நல்லெண்ணெய் நாழி அளவாய்ச் சேர்த்து துரிசு, வெள்ளைக் குந்திருக்கம் இவை வகைக்குக் கழஞ்சுவீதம் எடுத்துப் பொடித்து வடித்ததோடே கோழியின் இரத்தம் விட்டுக் கொப்பளிக்க பல்தொடர்பான அனைத்துத் துன்பங்களும் அகலும்.

## பாகலிலைத் தயிலம்

பார்ப்பதற்கென் றின்னமொரு சேதி கேளு
பாகலிலைச் சாறுடனே கொம்மட்டிச்சாறு
வேப்பிலையின் றன்சாறுமெருக்கன் சாறும்
விழுதியுட விலைச்சாறும் வகைக்கு நாழி
சேர்ப்பதென்ன வேப்பெண்ணெய் மணக்கினெண்ணெய்
சேர்வகைக்கு நாழிவிட்டுப் பதமாய்வாங்கித்
தார்ப்புடனே காசெடைதான் கொள்ளும்போது
சலக்கட்டு மலக்கட்டுங் கிருமியோடே 174.

கிருமியென்ற புழுக்களெல்லா மற்றுப்போகுங்
கெர்ப்பத்தில் மலட்டுப்புழு கெதிகெட்டோடும்
வறுமையென்ற வாய்வனைத்து மண்ணேயாகும்
வாதமொடு மலக்கட்டுத் திரண்டவாய்வு
ஒருமித்துக் காணாம லேங்கிவாடும்
உலகத்திற் சுருக்கிது தானுணர்ந்து தேறு
கருமமென்ற வகையெல்லாஞ் சொல்லிவிட்டேன்
கஷாயத்தின் பெருமையின்னுங் காட்டுவேனே. 175.

**பொழிப்புரை :-**

பாகலிலைச்சாறு, கொம்மட்டிச்சாறு, வேப்பிலையின்சாறு, எருக்கன்சாறு, விழுதியிலைச்சாறு இவை வகைக்கு நாழி எடுத்துக் கொண்டு வேப்பெண்ணெய். ஆமணக்கெண்ணெய் வகைக்கு நாழி விட்டு பதமாக்கிக் காசெடை கொள்ள சலக்கட்டு, மலக்கட்டு, கிருமி முதலியன உடன் அகலும். கெர்ப்பப்புழு அகலும். வாதம் முதலியவையும் நீங்கும்.

## மருதோன்றிக் கியாழம்

காட்டுவேன் மருதோன்றி வேர்தான் மைந்தா
கால்பலங்கேள் சீரகமு மொக்கச் சேர்த்தே
ஓட்டுகிற யிருநாழி நீரிலிட்டே
யுழக்காகக் காய்ச்சியதை யிரண்டுவேளை
மூட்டுகிறேன் மூன்றுதினங் கொள்வீரானால்
முறை சுரமும் விஷசுரமு மூலவாய்வு
மீட்டுவிடும் பித்தமொடு மாந்தந்தீரும்
விளம்பவே னின்னமொரு விதங்கடாமே. 176.

**பொழிப்புரை :-**

மருதோன்றிவேர், சீரகம் இவை கால்பலம் வகைக்கு எடுத்துச் சேர்த்து இருநாழி நீரில் இட்டு உழக்காகக் காய்ச்சி மூன்று தினங்கள், இரண்டு வேளைவீதம் கொண்டால் முறை சுரமும், விஷசுரமும், மூலவாயுவும், பித்தமொடு மாந்தமும் தீரும்.

## வெட்பாலைக் கியாழம்

விதமென்ன வெட்பாலை சீரகந்தான்
வீறாக வகைவகைக்குப் பலங்கால் தூக்கி
இதமுடனே யிருநாழி நீரில்விட்டே
யெட்டொன்றாய்க் காய்ச்சியதை யிறுத்துக்கொண்டு
பதமாகக் குடித்துவரில் தீரும்நோய் கேள்
பறக்குமடா வாய்வெல்லாம் பாருபாரு
மிதமில்லாக் குன்மவகை யனைத்துந்தீரு
மேன்மையா யின்னமொரு வரிசை கேளே. 177.

**பொழிப்புரை :-**

வெட்பாலை, சீரகம் இவை வகைக்குக் கால்பலம் எடுத்துச் சேர்த்து இருநாழி நீரில் இட்டு எட்டொன்றாக்கி இறுத்தெடுத்து முறையாக உட்கொண்டால் வாய்வு, குன்மம் முதலியன அகலும்.

## வில்வவேர்க் கியாழம்

வரிசையுள்ள நெற்பொரியும் வில்வ வேரும்
வகைக்குக் கால் பலமாயீ ராழிநீரில்
உரிசையுட னெட்டொன்றாய் வடித்துக் கொண்டே
யுட்கொள்ள வந்திசந்தி விக்கல்போகும்
பிரியமுட னின்னமொரு கியாழஞ் சொல்வேன்
பேரான முன்னைவேர் வில்வவேருந்
துரிசான சுக்குடனே வகைக்குக் காலாய்ச்
சூட்டியே யிருநாழி நீரிலிட்டே 178.

இட்டவித்தே யெட்டொன்றாய் சுண்டக் காய்ச்சி
யெடுத்துநீ கொண்டிடவே விக்கல்வாந்தி
முட்டவிடும் பித்தமுட னுழலைதாக
முறையான சுரந்தீரு மொழிந்தவாறு
சட்டமுட னின்னமொரு சேதிகேளு
தருவான முத்தமொடு விஷ்ணுகாந்தி
இட்டமுடன் காற்பலமாயிடித்துத் தூக்கி
யிருநாழி நீரினில்விட் டெட்டொன்றாக்கே 179.

## திரிபலாதிக் கியாழம்

ஆக்கியே மூன்றுநா ளிருபோதுண்ண
வகன்றற ஐய மீளையிளைப் பதிகமூச்சு
போக்கிவிடு மதனோடு மிளகு கூட்டிப்
புண்ணியனே கியாழத்தைத் தேனிற்கொள்ளு
பாக்கியமா மின்னமொரு வகையைச் சொல்வேன்
பச்சைநெல்லித் தான்றியுடன் கடுக்காய் மூன்று
நோக்கியே வகைக்குக் காற் பலமே தூக்கி
நுண்மையாய் மிளகதிலே கழஞ்சுகூட்டே 180.

கூட்டியே யிருநாழி நீரிலிட்டுக்
குலாவியே யெட்டிலொன்றாய்த் தேனுஞ் சேர்த்து
நாட்டியே திரிகடுகு சூரணித்து
நலமாக விட்டருந்த சிலேற்பனங்கள்
நீட்டியே கபமீளை யிளைப்புக் காய்ச்சல்
நீங்குமே சயமனைத்தும் நில்லாதாகும்
ஓட்டியே விடுவதற்கா யின்னும் வேறே
யுரைக்கிறே னுலகத்தோர் பிழைக்கவென்றே 181.

**பொழிப்புரை :-**

நெற்பொரியும் வில்வவேரும் வகைக்குக்கால் பலம் எடுத்து இருநாழி நீரில் இட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து உட்கொள்ள விக்கல்போகும். இன்னமும் ஒரு கியாழம் சொல்லு கிறேன். முன்னைவேர், வில்வவேர், சுக்கு இவை வகைக்குக் கால் பலம் எடுத்துக் கூட்டி இருநாழி நீரில் இட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி உட்கொள்ள விக்கல், வாந்தி, பித்தமுடன் அழலை தாகம், முறை சுரம் இவை தீரும். முத்தக்காசு, விஷ்ணுகாந்தி இவை வகைக்கு கால்பலம் எடுத்து இடித்துத் தூக்கி இருநாழி நீரில் இட்டு எட்டொன்றாக்கி அதனோடு மிளகு கூட்டித் தேனில் மூன்று நாள் இருபோது உண்ண ஈளை, இளைப்பு முதலியன அகலும். இன்னமும் ஒருவகையாவது பச்சை நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய் இவை மூன்றும் வகைக்குக் கால்பலம் எடுத்து மிளகு கழஞ்சுகூட்டி இருநாழி நீரில் இட்டு எட்டொன் றாக்கித் தேனும் சேர்த்து திரிகடுகு சூரணித்துச் சேர்த்து உட் கொள்ள சிலேற்பனங்கள், கபம், ஈளை, இளைப்பு, காய்ச்சல், சயம் அனைத்தும் விலகும்.

## சந்தனக் கியாழம்

என்றதொரு சந்தனமும் விலாமிச் சோடு
வெட்பாலை முத்தமுடன் சுக்கு மைந்து
நன்றெனவே வகைக்குக்காற் பலமதாக
நலமுடனே தூக்கியிரு நாழி நீரில்
பொன்றவே யெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
புகழ்சீனியுடன்பத்து நாள்தான் கொள்ள
சென்றதொரு சுரம் வாயு சலதோடங்கள்
சிரசிலுள்ள பித்தநீர் சேத்ம வாதம் 182

## வேம்புக் கியாழம்

வாதமொடு தாகங்க ணீர்க்கடுப்பு
மஞ்சளூறும் பித்தக்கா மாலை தீரும்
வேதமாயின்னுமொரு கியாழஞ் சொல்வேன்
வேம்பினது பட்டையுடன் மிளகுஞ் சுக்கும்
நாதமுடன் வகைக்குக்காற் பலமேயாக
நளினமா யிருநாழி நீரிலிட்டுப்
போதமுட னெட்டொன்றாய் வடித்துக்கொள்ளு
புழுக்கிருமி மந்தமொடு வாய்வெல்லாம் போம் **183.**

**பொழிப்புரை :-**

சந்தனம், விலாமிச்சு, வெட்பாலை, முத்தக்காசு, சுக்கு ஆகிய ஐந்தும் வகைக்குக் கால்பலம் எடுத்துச் சேர்த்து இருநாழி நீரில் இட்டு எட்டொன்றாக்கி வடித்து சர்க்கரையுடன் பத்து நாள் கொள்ள சுரம், வாயு, சலதோஷங்கள், சிரசிலுள்ள பித்த நீர், சேத்மவாதம், நீர்க்கடுப்பு, காமாலைதீரும். வேறு ஒரு கியாழம் சொல்லுவேன். வேம்பின்பட்டை, மிளகு, சுக்கு, கோஷ்டம் இவை வகைக்குக் கால்பலம் எடுத்து இருநாழி நீரில் இட்டு எட்டொன்றாக்கி வடித்து உட்கொள்ள புழு, மாந்தம், வாய்வு முதலியன போகும்.

## இருவேலிக் கியாழம்

எல்லாந்தான் போகவொரு கியாழஞ் சொல்வேன்
இருவேலி மதுரமுட னிஞ்சி மூன்றுஞ்
சொல்லாலே வகைக்குக்கால் பலமாய்த் தூக்கிச்
சுகமாக யிருநாழி நீரிலிட்டு
வெல்லவே தீயிலெரித் தெட்டொன்றாக்கி
வீறாகப் பத்துநாட் கொள்வாயானால்
வல்லதொரு வாய்வுபித்தஞ் சோகைபாண்டு
வாங்கிவிடு மரோசிகமும் வாராதென்னே. **184.**

**பொழிப்புரை :-**

இருவேலி, அதிமதுரம், இஞ்சி இவைமூன்றும் வகைக்குக் கால்பலம் எடுத்து இருநாழி நீரில் இட்டு எட்டொன்றாக்கிப் பத்து நாள் உட்கொள்ள வாயு, பித்தம், சோகை, பாண்டு, முதலியன அகலும்.

வாராம லின்னமொரு சேதிசொல்வேன்
மைந்தனே புட்டவியல் மார்க்கங் கேளு
தாரான பேய்ப்புடலும் பற்படாம்பின்
நருந்துளசி தூதுளையுங் கண்டங்காலி
பாராமற் றோடையிலை சங்கு சுக்கும்
பருவமுறு திப்பிலியு மிளகுமூலி
சீராக வகைவகைக்கோர் பிடியதாகச்
சேர்ந்தமருந் தொருகழஞ்சு நிறுத்துவாங்கே 185.

வாங்கியே யிடித்தவற்றைப் புட்டேயாக்கி
வளம்பெறவே பிழிந்துகற் கண்டு தேனில்
ஓங்கியே கொண்டுவிடச் சிலேற்பனங்கள்
உள்ளிரும லுட்சுரங்கள் வாதவாய்வு
நீங்கியே போமென்று சொன்னேன் சொன்னேன்
நிச்சயமா மின்னமொரு விலைநீர் சொல்வேன்
தாங்கியே முசு முசுக்கை விஷ்ணு மூலி
தன்னுடனே நில வேம்பு சங்கங்குப்பி 186.

குப்பியது வகைவகைக்கோர் பிடியதாக
குறுகவே தானரிந்து சட்டி தன்னிற்
செப்பமுட னேயவித்துப் பிழிந்து கொண்டு
சேர்க்கின்ற மருந்ததனைச் செப்பக் கேண்மின்
ஒப்பமுடன் சீரகமுஞ் சுக்கிரண்டு
முடன்வறுத்துச் சூரணித்து மேலேதூவி
இப்புவியிற் றேன் கூட்டி யுண்பீராகி
ஓஷ்ணமுடன் வாதசுர மிடைந்துபோமே. 187.

**பொழிப்புரை :-**

புட்டவியல் முறையில் வேறுமுறையும் சொல்லுகிறேன். பேய்ப்புடல், பற்பாடகம், கருந்துளசி, தூதுவேளை, கண்டங் கத்தரி, ஆடாதோடை, சங்கு, சுக்கு, திப்பிலி, மிளகு ஆகிய இலைகள் இவை வகைக்கு ஓர்பிடியாய் எடுத்து சேர்த்து ஒரு கழஞ்சு அளவாக நிறுத்துக்கொண்டு அவற்றை இடித்துப் பிட் டாகப் பிழிந்து கற்கண்டு தேனில் கொள்ள சிலேற்பனங்கள், உள்ளிருமல், உட்காய்ச்சல், வாதவாயு முதலியன அகலும். இன்னமும் ஒரு இலைநீர் கூறுகிறேன். முசுமுசுக்கை, விஷ்ணு கிரந்தி, நிலவேம்பு, சங்கங்குப்பி இவை வகைக்கு ஒருபிடி எடுத்து அரிந்து சட்டியிலிட்டு அவித்துப் பிழிந்து, சீரகம், சுக்கு இவற்

றைச் சேர்த்து வறுத்து சூரணம் செய்து அப்பிழியலின் மேல் தூவி தேன்கூட்டி உண்டால் உஷ்ணமுடன் வாதசுரம் விரைந்து அகலும்.

## மூலிகை அவியல் நீர்

இடைந்திடவே யின்னமொரு சேதி சொல்வே
　　ணியல்பான நிலவேரு மிஞ்சியுள்ளி
மடந்தயரே கொத்தானும் வேப்பமொக்கும்
　　வளமான நொச்சிலையும் வகையாய்க் கொண்டு
கடந்ததொரு மருந்தெல்லாம் கழஞ்சு வீதம்
　　கருவாக வேயிடித் தவித்து வாங்கி
செடந்தனக்குத் தேன்கூட்டிக் கொள்வீராகிற்
　　செய்யசுரஞ் சன்னிமுதற் சிலேத்மவாதம் 188.

வாதமொடு சன்னியெல்லா மாண்டு போகும்
　　வஞ்சகங்க ளில்லாமல் மருந்து சொன்னேன்
போதமுடன் கண்டவனே நல்லோ னாகும்
　　பொய்யொன்று சொல்பவனே பொல்லாப்பாவி
வேத முனி யிந்தநூல் வெளியாய்ச் சொன்னேன்
　　வித்தையிலே வெகுவித்தை யேகவித்தைக்
காதமல்ல தூரமல்ல விரும்பிச் செய்து
　　கனம்பெற்ற யீஸ்வரனா யிருக்கலாமே. 189.

**பொழிப்புரை :-**

நிலவேர் (பூநாகம்), இஞ்சி, உள்ளி, முடக்கத்தான், வேம்பின் மொக்கு, நொச்சி இலை இவை கழஞ்சு வீதம் எடுத்து இடித்து அவித்துப் பிழிந்து தேன்கூட்டி உட்கொண்டால் சுரம், சன்னி, சிலேத்மவாதம் முதலியன அகலும். ரகசியமெல்லாம் சொன்னேன். போற்றிச் செய்து புகழ்பெறுவாயாக.

## சிவன் வேம்புத் தயிலம்

இருக்கவே யின்னமொரு சேதி கேண்மின்
　　இயல்பான சிவன்வேம்புத் தயிலம்வாங்கிச்
சுருக்கமா யம்மூலிச் சூரணித்துச்
　　சுகமாகத் தயிலத்திற் குழப்பிக்கொண்டால்

முருக்கம்பூப் போலாகு மேனியெல்லா
முனைமுகத்து வெட்டுண்ட புண்ணுமாறுஞ்
சுருக்கியதோர் கால்வெடிப்புங் குட்டஞ்சூலை
துலையாத கடிவிஷமுந் தோற்றுப்போமே. 190.

**பொழிப்புரை :-**

சிவனார் வேம்பின் தயிலம் வாங்கி அம்மூலிகையின் சூரணத்தை அதிலிட்டுக் குழப்பிக்கொண்டு எடுத்து உடம்பில் தடவ போர்முனையில் பட்ட காயம், கால்வெடிப்பு, குட்டம், சூலை, கடிவிஷம் முதலியன அகலும்.

## வீழிவேர்த் தயிலம்

தோற்கவே யின்னமொரு சேதி கேளு
சுருதியாம் வீழிவேர்த் தயிலம் வாங்கி
ஆர்க்கவே யம்மூலிச் சூரணித்தே
யதிற் குழப்பிக் கொண்டிடவே மண்டலந்தான்
ஊக்கமுள்ள குட்டமெல்லா மொழிந்துபோகும்
உடலில்வந்த வெளுப்பெல்லா மோடிப்போகுஞ்
சேர்க்கவின்னஞ் செப்புகிறேன் றிறமாய்க் கேண்மின்
சேங்கொட்டைத் தயிலமதை யிறக்கிக் கொள்ளே.
191.

## சேங்கொட்டைத் தயிலம்

இறக்கியே பஞ்சாங்கஞ் சூரணித்தே
யிதிற்குழப்பித் தின்றிடவே யெல்லா நோயும்
பறக்குமடா நரைதிரையும் வாராதென்று
பகர்ந்திட்டே னின்னமொரு சேதிகேளு
சிறக்கவே வேம்பினுட தயிலம் வாங்கிச்
சீரகத்தைப் பஞ்சாகச் சூரணித்து
நிறக்கவே யதிற்குழப்பித் தின்றாயானால்
நீங்காத வாதமெல்லாம் நீங்கிப்போமே. 192

## தேற்றான் தயிலம்

நீங்கிப்போங் குட்டமொடு கிரந்தி சூலை
நிலையான நரைதிரையும் நிலைகெட்டோடும்
ஓங்கியே யின்னுமொரு சேதிகேளு
உறுதியுள்ள தேற்றானைத் தயிலமாக்கி
வாங்கியே பஞ்சாங்கஞ் சூரணித்து
வலுவான தயிலத்தில் குழைத்துட்கொள்ள
ஏங்கியே வியாதியெல்லாந் திடுக்கிட்டேதான்
இருந்தவிடம் விட்டோடு மிருப்புத்தானே. 193

**பொழிப்புரை :-**

வீழிவேர்த் தைலம் வாங்கி அவ்வேரைச் சூரணித்துக் குழப்பிக் கொண்டு ஒருமண்டலம் பயன்படுத்த குட்டம் எல்லாம் ஒழிந்து போகும். உடலில் வந்த வெளுப்பெல்லாம் ஓடிப் போகும். வேறு ஒரு மார்க்கமாவது, சேங்கொட்டைத்தயிலம் இறக்கி, சேங்கொட்டைப் பஞ்சாங்கம் சூரணம் செய்து அதில் குழப்பித்தின்றிட நோயெல்லாம் அகலும். நரைதிரையும் வாரா. வேறு ஒரு மார்க்கமாவது, வேம்பின் தைலம் வாங்கி, சீரகத்தைச் சூரணித்து அதில் குழப்பித் தின்றால் வாதம், குட்டம், கிரந்தி, சூலை, முதலியன நீங்கிப்போகும். அடுத்து தேற்றானைத்தயில மாக்கி, பஞ்சாங்கம் சூரணித்துத் தயில நீரில் குழைத்து உட் கொள்ள வியாதியெல்லாம் விரைந்தோடிப்போகும்.

## வாலுளுவைத் தயிலம்

இருப்பான வாலுளுவைத் தயிலம் வாங்கி
யியல்புடனே யுட்கொள்ள மண்டலந்தான்
கருப்பான நோய்களெல்லா மோடிப்போகுஞ்
கைகண்ட வித்தையடா தயிலப்போக்கு
கொருப்பான பிராயினது தயிலம்வாங்கிக்
கொண்டிடவே யரையாப்புக் குஷ்டமோடு
பொருப்பான பற்பிளவு முதலாயுள்ள
பொல்லாத நோய்களெல்லாம் போகுந்தானே. 194.

**பொழிப்புரை :-**

வாலுளுவைத் தயிலம்வாங்கி மண்டலம் உட்கொள்ள தோல் பற்றிய நோய்களெல்லாம் ஓடிப்போகும். பிராயினது தயிலம் கொள்ள அரையாப்பு, குஷ்டம் முதலிய நோயெல்லாம் போகும்.

## வெண்புரசு தயிலம் — வெள்வேல் தயிலம்

தானென்ற வெண்புரசுத் தயிலம் வாங்கிச்
சாதகமாய்க் கொண்டிடவே மண்டலந்தான்
ஏனென்ற குஷ்டங்க ளெல்லா நீங்கும்
யெளிதாக யிம்மருந்தை யிசைந்து செய்நீ
பானென்ற வெள்வேலின் தயிலங் கொண்டால்
பல்லுளைவு நின்றுவிடும் பழமையாகும்
ஊனென்ற வாய்வினுட தயிலங் கொண்டால்
உறுதியாம் வியாதியெல்லா மொழிந்துபோமே. 195.

**பொழிப்புரை :-**

வெண்புரசுத்தயிலம் வாங்கி மண்டலம் கொள்ள குஷ்டம் நீங்கும். எளிதாக இம்மருந்தை இசைந்து செய்வாயாக. வெள்வேலின் தயிலம் கொண்டால் பல்லுளைவு நின்றுவிடும். வாய்விடங்கத்தின் தயிலம்கொள்ள பல்லின் வியாதியகலும்.

## கருஞ்சீரகத் தயிலம்

ஒழிவே யின்னமொரு விவரங் கேளாய்
உரியகருஞ் சீரகமுங் கெந்தகந்தான்
தெளியவே பத்துக்கொன்றாகச் சேர்த்துத்
திறமாகக் குழித்தயில மிறக்கி யுண்ண
வளியவே வந்தவினை சிரங்கு குட்டம்
வாதமொடு சூலையெல்லா மகன்று பின்னுந்
துளிபாயுஞ் சீழ்சலங்கள் கரப்பன் போகுந்
தோலுரியுந் தழுதணையுஞ் சுத்தமாமே. 196.

**பொழிப்புரை :-**

கருஞ்சீரகமும் கெந்தகமும் பத்துக்கொன்று சேர்த்து குழித்தயிலம் இறக்கி உண்ணச் சிரங்கு, குட்டம், வாதமொடு சூலை எல்லாம் அகன்று போய்த் தோல் சுத்தமாகும்.

## அமுக்கிரா வேர்த் தயிலம்

சுத்தமா மின்னமொரு சேதிகேளு
சூட்சமா யமுக்கிராத் தயிலம் வாங்கி
பத்தியா யதன்வேரைச் சூரணித்துப்
பாய்ச்சியே கொண்டுவிட மண்டலந்தான்

நித்தமாஞ் சூலையொடு கிரந்தி குஷ்டம்
நீங்காத வியாதியெல்லாம் நீங்கிப் போகும்
உத்ததொன் றுரைக்கிறேன் முக்கியமாக
வுரப்பான சீனப்பா தைலம் வாங்கே. 197.

## சீனப்பா தயிலம் — ஓமத் தயிலம்

தயிலத்திற் சூரணத்தைக் குழப்பி யுண்ண
தனதான சூலைவகை தவறுண்டோடு
மயிலொத்த விழிமாதே யின்னம் வேறே
மாச்சரியத் தயிலமொன்று அறையக்கேளு
பயிலொத்த ஓமமொரு வசம்பு கார்கோல்
பாங்காக விவைகளைநீதயிலம் வாங்கித்
துயில்பெற்ற முச்சரக்கைப் பொடித்திட்டேதான்
துலங்கவே குழப்பியுண்டா யினிச் சொல்வோமே.
198.

## சாரணை வேர்க் குழித்தயிலம்

ஓமென்ற வியாதியெல்லாங் கடலேபுக்கும்
உண்மையாய்த் தயில முரைத்தோங் கேளு
நாமெனவே யதிற் குழப்பி யுண்ணும்போது
நாடாது கிரந்தி குஷ்டம் நளினமாகும்
வாமென்ற சன்னியொடு வாதமேகும்
வளமாக வின்னமொரு வரிசை சொல்வேன்
தாமென்ற சாரணைவேர் தனையிடித்துத்
தனதாகக் குழித்தயிலம் வாங்கிடாயே 199.

வாங்கியே வேரணைத்துந் தயிலமாக
மைந்தனே யெடுக்கிறதோர் மார்க்கமாகும்
தாங்கியே யவ்வேரின் சூரணத்தைத்
தானதிலே குழைத்துண்ணத் தீருநோய்கேள்
தீங்கான வாதமெல்லாஞ் சிதறிப்போகுந்
திசைவாய்வு மலபேதந் தீருந் தீரும்
பாங்கென்ற தித்தனையுஞ் சொன்னோ மின்னும்
பகருவோம் வெந்தொன்றிக் கிழங்கு போக்கே. 200.

**பொழிப்புரை :-**

அமுக்குராத்தயிலம் வாங்கி அதன்வேரைச் சூரணித்துக் குழப்பி ஒருமண்டலம் உட்கொள்ள சூலை, கிரந்தி, குஷ்டம் முதலிய நீங்காத தோல் நோயெல்லாம் நீங்கிப் போகும். சீனப்பா (பரங்கிச்சிரங்கு) தயிலம் வாங்கி, அதனைச் சூரணித்துக் குழப்பி உட்கொள்ள சூலை வகை எல்லாம் அகலும். ஓமமொடு வசம்பு, கார்போகம் இவற்றைத் தயிலமிறக்கி பொடியைக் குழப்பி உண்ண கிரந்தி, குஷ்டம், சன்னி, வாதம் இவை விரைந்து அகலும். சாரணை வேர் இடித்துக் குழித்தயிலம் இறக்கி, அவ்வேரின் சூரணத்தை குழைத்து உண்ண வாதம், வாயு, மலபேதம் இவை தீரும்.

## வெந்தோன்றிக் கிழங்குத் தயிலம்

கிழங்கதனை நிழலுலர்த்தித் தயிலம் வாங்கிக்
கெட்டியாய் வெந்தொன்றிச் சூரணித்தே
உளங்குளிர விதையதிலே விரவித்தின்றா
லோடிவிடுங் குட்டமீ ரொன்பதுந்தான்
களங்கமற நீங்கிவிடு மண்டலத்திற்
காயசித்தி யுண்டாகுங் கவன மாகும்
சளம்போக வோராண்டு கொண்டாயானால்
சகலசித்தி கைவசமாஞ் சஞ்சீவி போலே. 201.

**பொழிப்புரை :-**

வெந்தோன்றிக் கிழங்கை நிழலில் உலர்த்தித் தயிலம் வாங்கி, வெந்தோன்றிச் சூரணத்தை அதில் விரவித்தின்றால் ஒரு மண்டலத்தில் குஷ்டம் பதினெட்டும் அகலும். ஒரு ஆண்டு உட்கொள்ள சகலசித்தும் கைவரப்பெறும்.

சஞ்சீவி போலவிந்த நூலைச் சொன்னோஞ்
சண்டாள மாபாவிக் கீய வேண்டாம்
நஞ்சுப்போ லாகுமிந்த முறைதானப்பா
நடுங்கவே வியாதிகளை நாடிக்கொல்லும்
கெஞ்சுவா ருலகுதனில் வாகடத்தைக்
கேட்டாலுங் கொடுக்கரிது கேள்வியன்றி
மிஞ்சவே யுபசரித்துத் தொண்டு செய்து
வேணதன மீய்ந்தாலு மீயார்தானே 202.

**பொழிப்புரை :-**

சஞ்சீவிபோல் இந்த நூலைச்சொன்னோம். தீயோர்க்கு இதனைக் கூறுதல் வேண்டா.

தானென்ற சேதியொன்று சொல்லக்கேளுஞ்
சாதகமாய்ச் செந்தூரஞ் செய்துகொண்டே
வானென்ற லேகியங்கள் வளமாய்க் கூட்டி
வகையாக வனுபானந் தனையறிந்தே
ஏனென்ற கியாழமுட னிதனையெல்லா
மெடுத்துசெய்வான் தொழிலாளி யிதமாய்த்தானே
பானதுமுன் பனி நீங்கும் பான்மை போலப்
பலபிணியும் நீங்கிவிடும் பரிந்தீவாயே. 203

**பொழிப்புரை :-**

முறைப்படியே செந்தூரம், லேகியம், இவற்றைத் தக்க அனுபானங்களோடு, கியாழம் முதலியனவும் உட்கொள்ள கதிரவன்முன் பனிநீங்குவதுபோல சகலபிணியும் நீங்கும்.

ஈவதிந்த நூற்றொகைதா னிருநூற்றைந்து
மிகத்திலுள்ளோர் பிழைக்கவென் றிரங்கிச் சொன்னேன்
தாயிருக்கப் பிள்ளைக்குத் தயக்கமில்லாத்
தன்மைபோ லவிவற்றைச் சாற்றினேன்யான்
நோய்மிகுந்து சாவதில்லை யொருநாளுந்தான்
நுண்மையாய்ச் சரக்கையெல்லா நீற்றிக் கொண்டு
வாயமுட லெண்ணெயொடு கிரதஞ் செய்து
வைத்திடுவா யனுபான வைத்தியமென்னே. 204.

என்னவே யிகத்தி லுள்ளோர்க் கிரங்கியேசொன்ன மார்க்கம்
முன்னமே யுரைத்த நூலின் முயற்சியா மிந்த சூத்திரம்
வன்னமாம் பாரு லோக மாரண மாகச் செய்ய
முன்னமே சொன்னோமிந்த வயித்திய மதிக முற்றே. 205.

**பொழிப்புரை :-**

இந்த இருநூற்றுஐந்து பாக்களை உலகிலுள்ளோர் பிழைக்க வென இரங்கிச் சொன்னேன். தக்கபடி மருந்து செய்து அனுபானத்துடன் கொள்ள நோய்மிகுந்து சாவுவருவதில்லை. உலகிலுள்ளோர்க்கென இரங்கிச் சொன்ன இந்த நூல் முன்னர் சொன்னதன் சுருக்கமாகும். இந்நூல் முற்றாகும்.